www.padippakam.com

இலங்கையில் செய்திப் பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டது. Registered as a Newspaper at the G.P.O



# புதிய கண்ணோட்டம்

PUTHIYA KANNOTTAM
පුදිය කණ්ණෝට්ටම්

வெளியீடு: 16 | 01 வைகாசி 1995 | விலை: ரூபா ஐந்து

# மூன்றாவது நாட்டின் தலையீடு ஏற்படுமா?

**புலிகள் யுத்தத்தை நிறுத்தி பேச்சுவார்த்தைக்கு இணங்குதலும் அரசாங்கம் இனப்பிரச்சினைக்கான தீர்வை உடன் அறிவித்தலும் வேண்டும்**

மீண்டும் புலிகளால் தீவிரப்படுத்தப்பட்டுள்ள யுத்தம், இன்னும் பாரிய பின்விளைவுகளைத் தோற்றுவிக்குமே அல்லாமல் புலிகளின் தாகமான தமிழீழத்துக்கு இது வழிகாட்டாது. சிறீலங்கா அரசாங்கம் தனது இறையாண்மையை பாதுகாத்துக் கொள்ளவும், நாடு பிரிக்கப்படுவதை தவிர்க்கவும் 3வது நாட்டிடம் உதவி கோருவதற்கே இது வழிவகுக்கும். புலிகளின் தூர நோக்கற்ற செயற்பாடுகள், இராணுவ ரீதியில் குறுகிய வெற்றிகளை புலிகளுக்கு ஏற்படுத்திக் கொடுத்தாலும், நீண்டகாலத்தில் தமிழ் மக்களின் நலன்களை அது பலவீனப்படுத்துவதற்கு வழிவகுக்கும்.

இன்று புலிகளுக்கு இருக்கக்கூடிய இராணுவ பலமா[...]ு, தமிழ் மக்களின் பிரச்சினைக்கு ஓர் கௌரவமான தீர்வொன்றினை ஏற்படுத்துவதற்கு மி[...] போதுமானது. ஆனால் தனது இராணுவ பலத்தில அதீத நம்பிக்கை கொண்டு அதனை துஷ்பிரயோகம் செய்ய முற்படுவதானது, புலிகள் இயக்கத்தை மாத்திரமல்லாமல், தமிழ் மக்களி[...] [...]டகாலப் போராட்டத்தையே இது அழிவுக்கு இட்டுச்செல்லும்.

தமிழ் மக்களுககு, கௌரவமான தீர்வு, அமைதியான வாழ்க்கை, செழிப்பான எதிர்காலம் ஒன்றிற்காக சிந்திப்பதை விடுத்து அவர்களை அழித்தொழிக்கும் வகையிலேயே செயற்பாடுகள் இருப்பது வருந்தத்தக்கது. அரசாங்கமும் புலிகளும் தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண்பதற்கான பேச்சுவார்த்தைகளை நடாத்துவதை விடுத்து, அன்றாடப் பிரச்சினைகளைப் பேசி, பேச்சுவார்த்தையை முறித்துக் கொண்டமை பிழையான அணுகுமுறையாகும்.

தமிழ் மக்களின் நீண்டகால கோரிக்கைகளை கவனத்தில் எடுத்து அரசாங்கம் உடனடியாகவே நீதியான, தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வொன்றை முன்வைக்க வேண்டும். இவ்வரசியல் தீர்வுதான் புலிகளை மீண்டும் பேச்சு வார்த்தைக்கு தள்ளக்கூடிய ஒரே ஒரு ஆயுதமாகும். மக்கள் ஏற்றுக் கொள்ளக்கூடிய தீர்வொன்று முன்வைக்கப்படும் பட்சத்தில், புலிகளின் போராட்டம் முழுத் தமிழ் மக்களாலும் நிராகரிக்கப்படும் என்பதை அரசாங்கம் உணர்ந்துகொள்ள வேண்டும்.

## புலிகளின் குறுகிய நோக்கங்களுக்கு மக்களின் நீண்டகால நலன்கள் பலி

சமாதான நடவடிக்கைகளிலிருந்து தாம் விலகுவதாக ஒருதலைப்பட்சமாகவும், முரட்டுத்தனமாகவும் புலிகள் எடுத்த முடிவென்பது போர் நிறுத்த ஒப்பந்த மீறல் மாத்திரமல்ல, மாறாக பரந்துபட்ட மக்களின் விருப்பங்களையும், நீதியானதும், நீடித்து நிலைத்திருக்கக் கூடியதுமான, சமாதானத் தீர்வு வேண்டுமென்ற தமிழ்பேசும் மக்களின் அபிலாசைகளையும் நிராகரிக்கும் ஓர் செயலாகும்.

இனப்பிரச்சினைக்கு ஓர் முழுமையான அரசியற் தீர்வுபற்றிய பேச்சுவார்த்தையை நடத்த புலிகள் தொடர்ந்து மறுத்து வருவதும், தமது மேலாதிக்கத்தையும் இராணுவ நோக்கங்களையும் நிலை நாட்டுவதற்கான விடயங்களை மட்டும் நிபந்தனைகளாக முன்வைத்து அவற்றை வலியுறுத்தி வருவதும் புலிகளின் உள்நோக்கத்தினை அம்பலப்படுத்தவே உதவும். மக்களின் நீண்டகால நலன்களுக்குத் தமது குறுகிய நோக்கங்களை கீழ்ப்படுத்த முடியாதென்பதை புலிகள் மீண்டும் ஒருமுறை நிரூபித்துள்ளனர்.

சமாதான நடவடிக்கைகட்கு குந்தகம் விளைவிக்கக்கூடிய வகையில் ஆத்திரமூட்டலுக்குள்ளாவதில்லை என்ற அரசின் முடிவை ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி வரவேற்கின்றது. சமாதானத்திற்கான மக்கள் ஆதரவென்பது இலங்கையின் பரந்துபட்ட மக்கள் சமூகத்திடம் இருந்து கிடைத்ததொன்றாகும்.

இந்நிலைமை மேலும் பாதுகாக்கப்படவும், வளர்த்தெடுக்கப்படவும் வேண்டிய ஒன்றேயன்றி அலட்சியப்படுத்தக்கூடியதல்ல. அதே போல அமைதி சமாதான முயற்சியூடாக பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு தமிழ் மக்களிடமிருந்து பெற்ற நன்மதிப்பையும் ஆதரவையும் அவசரப்பட்ட, எரிச்சலூட்டும் நடவடிக்கைகளினூடாக வீணாக்கிவிடக் கூடாது. மாறாக புலிகள் பங்குபற்றினாலும் பங்குபற்றாவிட்டாலும், சமாதான முயற்சிகளைத் தொடர வேண்டியது அரசின் தவிர்க்க முடியாத கடமையாகும்.

இவ்வகையில் இனப்பிரச்சினைக்கான அரசியற் திட்ட யோசனைகளை மேலும் தாமதிக்காமல் அரசு மக்கள் முன்வைக்க வேண்டும். இனப்பிரச்சினையின் தீர்வுக்கு நீதியானதும், நிலைத்திருக்கக்கூடியதுமான ஓர் தீர்வை நோக்கிய இந்நடவடிக்கையானது, சமாதான முயற்சிகளை முன்னோக்கி எடுத்துச் செல்ல சாதகமான சூழ்நிலைகளைத் தோற்றுவிக்கும் என்பதுடன், இம் முயற்சிகளை சீர்குலைக்க முயலும் சக்திகளைத் தனிமைப்படுத்தி தோற்கடிக்கவும் அவசியமானதாகும்.

– க. பிரேமச்சந்திரன்
செயலாளர் நாயகம்

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி



# ஆற்றல்மிகு தோழர்களே!

### தோழர்களே!

எமது நாட்டில் 17 வருடகாலம் ஆட்சி புரிந்த ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் தூக்கி எறியப்பட்டு ஒப்பீட்டு அளவில் ஒரு முற்போக்கு அரசாங்கம் பதவிக்கு வந்துள்ளது. இவ் அரசாங்கத்தின் கீழ் ஓரளவுக்கேனும் தொழிலாளர் நலன்கள் பாதுகாக்கப்படும் என நான் நம்புகின்றேன்.

அதேசமயம் எமது உரிமைகளை வென்றெடுப்பதில் நாம் அக்கறையாகவும், ஆர்வமாகவும் இல்லாவிட்டால், அல்லது அதற்கான போராட்டங்களை நாம் முன்னெடுக்காவிட்டால்.... எமது உரிமைகளைப் பெற்றுக் கொள்ளவோ, பாதுகாக்கவோ முடியாமல் போய்விடும்.

ஒரு நூற்றாண்டுக்கு மேலாக உலகெங்கும் உள்ள பல லட்சக்கணக்கான தொழிலாளர்களின் போராட்டங்கள், தியாகங்களின் ஊடாகத்தான் குறைந்தபட்ச இன்றைய உரிமைகளையாவது நாம் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருந்தது.

### அன்பான தோழர்களே!

உலகத் தொழிலாளர்களின் உரிமைப் போராட்ட வரலாறுகள் எமக்கு ஏராளமான பாடங்களைப் போதித்துள்ளன. இதில் முக்கியமாக, தொழிலாளர்களின் உரிமைகளைப் பெறுவதாயின், அது போராட்ட வழிமுறை ஒன்றின் ஊடாகவே பெறமுடியும் என்பதை வரலாறு மீண்டும் மீண்டும் நிரூபித்திருக்கிறது.

அதேவேளை, தவறான தலைமைகளின் வழிகாட்டலினால் பல போராட்டங்கள் சீரழிந்து போயுள்ளன. பரந்துபட்ட மக்களின் ஈடுபாட்டையும், ஆதரவையும் பெற்றுக் கொள்வதனூடாகவே போராட்டங்கள் வெற்றியடைய முடியும். மாறாக, மக்களின் நலன்களுக்கு ஊறு விளைவிக்கக்கூடிய வகையில் போராட்டங்கள் இருக்குமேயாயின் அது அவர்களின் எதிர்ப்பையும் கோபத்தையும் தான் சம்பாதிக்கும். அதுமாத்திரமல்லாமல், நியாயமான கோரிக்கைகள் கூட மக்களால் அலட்சியப்படுத்திவிடக்கூடிய வாய்ப்பும் தோன்றி விடுகிறது.

எனவே தோழர்களே! எமது போராட்டங்கள் என்பது மக்களது அன்றாட வாழ்க்கையைப் பாதிக்காமல், அவர்களது ஆதரவைப் பெறும்வகையில் அமைய வேண்டும். அவ்வாறு நடத்தப்படும் போராட்டங்கள் நிச்சயமாக வெற்றிகரமான முடிவுகளைக் கொண்டதாகவே இருக்கும்.

தொழிலாளர் போராட்டங்கள் மாத்திரமல்ல, ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டமாயினும் சரி, அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான போராட்டமாயினும் சரி, எந்தவொரு போராட்டமாக இருந்தாலும்கூட மக்களின் ஒத்துழைப்போ, ஆதரவோ இல்லாமல் அப் போராட்டங்கள் எதுவுமே வெற்றி பெற முடியாது.

5

படிப்பகம்

www.padippakam.com



# கண்ணோட்டம்

## என்ன செய்ய வேண்டும்?

சந்திரிகா அரசினால் 8 மாதங்களாக புலிகளுடன் நடாத்தப்பட்டு வந்த பேச்சுவார்த்தை, 'நாம் பேச்சுவார்த்தையிலிருந்தும், யுத்த நிறுத்தத்திலிருந்தும் விலகுகிறோம்' என்ற புலிகளின் 19ம் திகதி நள்ளிரவுச் செய்தியுடன் முடிவுக்கு வந்துவிட்டது. செய்தி அரசுக்குக் கிடைத்த ஓரிரு மணி நேரத்திற்குள்ளேயே புலிகளின் இராணுவத் தாக்குதல்களும் ஆரம்பமாகின. கடற்படை, இராணுவத் தாக்குதல்களும் ஆரம்பமாகின. கடற்படை, இராணுவமுகாம், பொலிஸ் நிலையம் என பாதுகாப்புபடையில் சகல பிரிவுகளும் தாக்குதலுக்குள்ளாக்கப்பட்டுள்ளது.

எம்மைப் பொறுத்தவரை அவர்கள் பேச்சுவார்த்தையை ஓர் கட்டத்தில் குழப்புவார்கள் என்பதை நாம் எதிர்பார்த்தே இருந்தோம். ஆனாலும் கூட, முழு மக்களின் விருப்பும் சமாதானத்தை நோக்கியதாக இருந்ததால் அவர்களது விருப்புக்களை ஓரளவிற்காவது கவனத்திலெடுப்பதாகக் காட்டவேனும் புலிகள் இப்பேச்சுவார்த்தையுடன் சற்றுத்தூரம் செல்வார்கள் எனவும் நாம் எதிர்பார்த்தோம். ஆனால், அர்த்தமற்ற காரணங்களை முன்வைத்து இப்பேச்சுவார்த்தை ஒருதலைப்பட்சமாக முறிக்கப்பட்டதானது வேதனைக்குரியதே.

பேச்சுவார்த்தை முறிக்கப்பட்டதைக் காரணம்காட்டி சந்திரிகா அரசு மீண்டும் பொருளாதாரத் தடையைக் கொண்டுவந்ததும், கடல்வலயத் தடையைக் கொண்டு வந்ததும், கிளாலிப் பாதையைத் தடைசெய்ததும் – மக்களின் ஏகோபித்த வாக்குகளைப் பெற்றுக்கொண்ட ஓர் அரசின் நடவடிக்கையாக இருக்கக்கூடாது என்றே நாம் கருதுகின்றோம். ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க அவர்களே தமது பேட்டியின்போது 'புலிகளுக்குஎல்லாமே கிடைக்கின்றன, சிரமத்திற்குள்ளாவது பொதுமக்களே' என்பதைத் தெளிவாகக் கூறியிருந்தார்.

பிரச்சினையை இந்தளவுக்கு புரிந்துகொண்ட அவர் புலிகளுடனான பேச்சுவார்த்தை முறிவடைந்ததும் பொருளாதாரத் தடையைக் கொண்டுவந்ததானது மிகுந்த வேதனையையே அளிக்கிறது. வடகிழக்கிலுள்ள தமிழ் மக்கள் 85–90 வீதம் பேர் ஜனாதிபதி சந்திரிகா அவர்களின் சமாதானக் கோரிக்கைக்காக வாக்களித்தனர். அதுமாத்திரமின்றி தமிழ் மக்களின் பிரச்சினை அரசியற் பிரச்சினை. அதற்கு அரசியற் தீர்வே காணவேண்டும் என்பதை வலியுறுத்தி வந்த அவர், உடனடியாகவே தமிழ் மக்களுக்கெதிரான பல்வேறுபட்ட தடைகளையும் அமுல்படுத்தியதானது அவர்மீது நம்பிக்கை வைத்த மக்களுக்கு ஏமாற்றத்தையே அளித்துள்ளது.

இதேபோன்றே கடல்வலயத்தடைச் சட்டத்தை எடுத்துக்கொண்டால், இது நேரடியாகவே ஓர் கணிசமான மக்கள் சமுதாயத்தின் வாழ்க்கையுடனும் அவர்களின் ஜீவாதாரப் பிரச்சினையுடனும் சம்பந்தப்பட்டுள்ளது என்பதை ஜனாதிபதி அவர்கள் உணரவேண்டும். எந்தவித தொழிலுமின்றி லட்சக்கணக்கான மக்களைப் பட்டினிபோடும் ஓர் செயலாகவே இதனை நாம் கருதுகின்றோம். ஆகவே, குறைந்தபட்சம் அரசு ஏற்கனவே அனுமதி அளித்த அளவிற்காவது அம்மக்கள் மீன்பிடிக்க அனுமதி அளிக்க வேண்டும்.

இன்னோர் விடயத்தையும் நாம் ஜனாதிபதியவர்களின் கவனத்துக்கு கொண்டு வரவிரும்புகின்றோம். யாழ்குடாநாட்டு மக்களுக்கு வெளிஉலகுடன் ஓர் தொடர்பு வேண்டும். கிளாலிக் கடலேரிப் பாதையும் அடைக்கப்பட்டால் அவர்களால் குடாநாட்டை விட்டே வெளியிற் செல்ல முடியாத ஓர் சூழ்நிலை ஏற்படும். பொருளாதாரத்தடை வீதித்தடை, கடலேரித்தடை, மீன்பிடித்தடை இவற்றினால் பொருட்களின் அதிவேக விலையேற்றம் உடனடியாகவே மக்களை பெருஞ்சுமைக்குள்ளாக்கும். இவையெல்லாவற்றின் மூலமும் அரசாங்கம் யாரைப் பழிவாங்க முனைகின்றது? அமைதிப் பேச்சுவார்த்தையை முறித்துக்கொண்டது புலிகளே தவிர வடபகுதி மக்களல்ல. மக்களைப் பாதிக்கும் இத்தடைகள் அனைத்தும் நிறுத்தப்பட வேண்டும்.

நாம் ஏற்கனவே நீண்டகாலமாக புலிகளின் பிரச்சினை வேறு, மக்களின் பிரச்சினை வேறு என்பதைத் தெளிவுபடுத்தி வருகிறோம் தமிழ் மக்களின் இனப் பிரச்சினைத் தீர்வுக்கு அனைத்து மக்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஓர் தீர்வை அரசு உடனடியர்க முன்வைக்க வேண்டும். பல்வேறு பேச்சுவார்த்தை அரங்குகளில் ஈபிஆர்எல்எவ் ஆகிய நாமும் ஏனைய கட்சியினரும் தீர்வு தொடர்பான அடிப்படைகளையும், அதன் அமைப்பு பற்றியும் எழுத்து மூலமாகவும் பேச்சுவார்த்தை மூலமும் விளக்கியுள்ளோம். இறுதியாக தற்போதைய அரசியற் திட்ட அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் தலைமையிலான தெரிவுக்குழுவிலும் எமது நிலைப்பாட்டினைத் தெளிவுபடுத்தியுள்ளோம். ஏனைய கட்சிகளும் தனியாக தமது ஆலோசனைகளைத் தெரிவித்துள்ளன. இவற்றின் அடிப்படையில் ஓர் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வை அரசு முன்வைக்க வேண்டும்.

தமிழ் மக்களின் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வை முன்வைத்து செயற்படுத்துவதன் மூலம் மட்டுமே, மக்கள் மத்தியிலிருந்து புலிகள் போன்ற மக்களுக்கெதிரான சக்திகளை அந்நியப்படுத்தி உண்மையான சமாதானத்தை நிலைநாட்ட முடியும். தடைகளை நீக்கி மக்களின் நம்பிக்கையை அரசு பாதுகாப்பதுடன், இப்போருக்கு முடிவுகட்டும் ஆற்றல்மிகு சக்திகள் மக்களே என்பதனைப் புரிந்துகொண்டு, பிரச்சினைக்கு தீர்வு காண அரசு முன்வர வேண்டும். இதன்மூலம் மட்டுமே மக்களை சமூகவிரோத சக்திகளின் தவறான வழிக்குள் செல்வதிலிருந்து தடுத்து நிறுத்தி, வன்முறைக்கு முடிவுகட்டி நீடித்த சமாதானத்தை ஏற்படுத்த முடியும் என்பதை அரசுக்கு அழுத்தியுரைக்க விரும்புகிறோம்.

## புலிச் சிறையில் அப்பாவித் தமிழர்கள் தொடர்ந்து ஆறாவது வருடம்

புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள வடபகுதியில் புலிகளினால் கைது செய்யப்பட்டவர்கள் தொடர்ந்தும் சிறையில் அடைக்கப்பட்டிருக்கிறார்கள். 1990ம் வருடம் ஆரம்ப காலத்தில் கைது செய்யப்பட்ட பலர் இன்னமும் விடுதலை செய்யப்படவில்லை.

பத்திரிகையாளர்கள், எழுத்தாளர்கள், அரசியல்வாதிகள், மாற்று இயக்க உறுப்பினர்கள், மாற்று இயக்க ஆதரவாளர்கள், தமக்கு எதிரான கருத்துக் கொண்டவர்கள், தம்மோடு ஒத்துப்போகாத அரசு ஊழியர்கள், இப்படி பலதரப்பட்ட சுமார் 5000பேர் மட்டில் புலிகளின் வெஞ்சிறைகளில் வாடிக் கொண்டிருக்கிறார்கள்.

இவர்களில் பலர் கொலை செய்யப்பட்டு விட்டார்கள். சிலர் சித்திரவதைகளின்போது இறந்து போனார்கள்.

புலிகளால் கைது செய்யப்பட்டவர்களைப் பார்ப்பதற்கு உறவினர்களுக்கு அனுமதியில்லை. அதனால் கைது செய்யப்பட்டவர்கள் உயிரோடு இருக்கிறார்களா? என்பது கூட யாருக்கும் தெரியாமல் இருக்கிறது. கைது செய்யப்பட்டவர்களில் சிலர் இறந்து போய் விட்டதாக கூறி அவர்களின் உறவினர்களிடம் மரண அத்தாட்சிப் பத்திரம் சில இடங்களில் வழங்கப்பட்டுள்ளது.

ஆறுவருடங்களாக புலிகளின் சிறைகளில் அடைபட்டிருக்கும் தமிழர்களுக்காக, அவர்கள் விடுதலைக்காக, யாருமே அக்கறைப்பட்டதாகத் தெரியவில்லை. இலங்கை அரசு, இவ்விடயம் தொடர்பான தார்மீகக் கடமையை மறந்துவிடக்கூடாது.

சர்வதேச மன்னிப்புச்சபை, மற்றும் உலகெங்கும் உள்ள மனித உரிமை அமைப்புக்கள், சர்வதேச நாடுகள், மத ஸ்தாபனங்கள் எல்லாம் இத் தமிழரை விடுதலை செய்ய வேண்டும் என புலிகளை வற்புறுத்த வேண்டும்.

புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்கு வெளியே உள்ள தமிழர்களும் வெளிநாடுகளில் வாழும் இலங்கைத் தமிழர்களும் இந்த விடயத்தை சொந்த பிரச்சினையாகக் கருதி இவர்களின் விடுதலைக்காக குரல்கொடுக்க வேண்டும்.

– சமரன் (கடிதம்)

## கழுதை பேசுகிறது

பிலேயாமின் கழுதையானது,
"நீர் என்னை அடிப்பதற்கு நான் உமக்கு
என்ன செய்தேன்" என்று கேட்டபோது
"நீ என்னைப் பரிகாசம் பண்ணிக் கொண்டு
வருகிறாய், என்னிடம் ஒரு பட்டயம்
மாத்திரம் இருந்தால்
உன்னை இப்போதே கொன்று போடுவேன்"
என்று பிலேயாம் சொன்னான்.
ஆதரவு தந்தாய், ஆகாரம் தந்தாய்
காசு நகைகள் வீடுகள் தந்தாய்
ஆயுதம் சுமந்து அலைந்து திரிந்தாய்
கள்ளன் என்றபோதில் கொன்று போடவும்
அந்நியனாயின் அடியோடழிக்கவும்
நட்பென்றபோதில் நண்பனென்னவும்
து-என்றபோதில் துரோகியென்னவும்
ஆ-என்றபோதில் ஆக்கிரமிப்பென்னவும்
ச-என்றபோதில் சயனைட்டென்னவும்
என் குறிப்பறிந்து ஏவாதொழுகினாய்
ஆயின், இப்போதோ அஃதொன்றுமில்லானாய்
சந்திரிகா என்கிறாய் சமாதானமென்கிறாய்
இதற்கும் மேலும்
"இந்நாள் வரைக்கும் நீர் ஏறின கழுதை
நானல்லவா, இப்படி உமக்கு
எப்போதாகிலும் நான் செய்ததுண்டோ"
என்று கேட்கிறாய்
பேச்சுவார்த்தையும் சமாதானமும்
போராட்டமும் போர் நிறுத்தமும்
உன்னிலுமில்லை என்னிலுமில்லை
இந்நாள் வரைக்கும் நான் ஏறின கழுதையே!
இறக்கும் வரைக்கும் நீ - இதனை அறிக!

- சுகன் (பிரான்ஸ்)

### தோழர்களே, நண்பர்களே, வாசகர்களே!

உங்களிடமிருந்து அபிப்பிராயங்கள், விமர்சனங்கள், ஆலோசனைகளையும், ஆக்கங்களையும் புதியகண்ணோட்டம் வரவேற்கிறது. அனுப்ப வேண்டிய முகவரி:

**புதியகண்ணோட்டம்,
த.பெ.இல: 442,
கொழும்பு**

புதியகண்ணோட்டம் தொடர்பான அனைத்து நேரடித் தொடர்புகளுக்கும்:

29A, வாவிக்கரை வீதி-1,
மட்டக்களப்பு.
☎ 065-2398

88/2, வாடிவீட்டு வீதி,
கல்முனை.

54, மாணிக்கவாசகர் வீதி,
திருகோணமலை.

22, வெளிவட்ட வீதி,
வவுனியா.

மன்னார்
☎ 023-2370

வெளிநாட்டு முகவரிகள்:

Post Bag: 1041,
Madras-17,
India.

E.P.I.C
Box No: 95,
95144, Garges Les,
Gonnesse Cedex,
France.

B.M.Box: 1738,
London-WCIX-3NN,
U.K.

P.Fach: 100206,
44002 Dortmund,
Germany.

P.Box: 6800,
Agincourt,
Ont-MIS3C6,
Canada.

P.Fach: 506,
Bern-17,
Switzerland.

படிப்பகம்

www.padippakam.com



# பாராளுமன்ற தெரிவுக்குழுவுக்கு ஈ.பி.ஆர்.எல்.எவ் ஆலோசனை

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செயலாளர் நாயகம் சுரேஷ் பிரேமச்சந்திரன், அரசியல்பீட உறுப்பினர் எல். கேதீஸ்வரன் ஆகியோர் உள்ளிட்ட தூதுக் குழுவினர் 15.03.95 அன்று, அரசியல் யாப்பைத் திருத்துவதற்கான அமைச்சர் ஜி.எல். பீரிஸ் தலைமையிலான பாராளுமன்ற தெரிவுக் குழுவைச் சந்தித்து தமது ஆலோசனைகளை வழங்கினர். இதில் கீழ்க்கண்ட விடயங்கள் முக்கியமாக வலியுறுத்தப்பட்டன:

1. அரசியல் சாசனத்தின் சரத்து 1 திருத்தப்பட வேண்டும். அதாவது இலங்கை 'மதசார்பற்ற ஜனநாயக சமஷ்டிக் குடியரசாக' பிரகடனப்படுத்தப்பட வேண்டும்.

2. அரசியல் சாசனத்தின் 2வது சரத்தான 'இலங்கை ஓர் ஒற்றையாட்சி நாடு' என்ற சரத்து நீக்கப்பட வேண்டும்.

3. 18வது சரத்து திருத்தி அமைக்கப்பட்டு சிங்களமும், தமிழும் அரசகருமமொழிகள் என மாற்றி அமைக்கப்பட வேண்டும்.

4. 2வது அத்தியாயத்தில் பௌத்த மதத்துக்கு மாத்திரம் கொடுக்கப்பட்டுள்ள முதன்மை இடமானது அகற்றப்பட வேண்டும்.

5. அரசியல் சாசனத்தின் 76(1)வது சரத்து நீக்கப்பட்டு பிராந்திய சபைகள் தமது சட்டங்களை அவர்களே இயற்ற வழிவிட வேண்டும்.

மேலும், 13வது திருத்தச் சட்டத்தில் இணைப்பு நிரலில் (Concurrent List) இல் இருக்கக்கூடிய சகல அதிகாரங்களும் மாகாண அல்லது பிராந்திய அலகுக்கு மாற்றப்பட வேண்டும் எனவும், மத்திய அரசின் நிரலில் உள்ள காணி, காணிப் பங்கீடு, சட்டம் ஒழுங்கு, துறைமுகங்கள், வெளிநாட்டுக் கடனுதவிகளைப் பெறுவதற்கான பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கான அதிகாரங்களும் மாகாண/பிராந்திய அலகுக்கு இருக்க வேண்டுமென வலியுறுத்தப்பட்டது.

சமஷ்டி ஆட்சி இலங்கைக்குள் வட கிழக்கு மாகாணம் சுயாட்சி அதிகாரமுள்ள பிரதேசமாக அமைய வேண்டும். இச் சுயாட்சிப் பிரதேசம் தனது சட்டவாக்க சபை, முதலமைச்சர், மந்திரி சபை, பிராந்திய நிர்வாக சேவை, பிராந்திய சட்டம் ஒழுங்கு, உள்பாதுகாப்புப் பொறிமுறை ஆகியவற்றுடன் கூடிய மாநில ஆட்சியைக் கொண்டிருக்கும்.

இனப்பிரச்சினை தொடர்பாக பிரேரிக்கப்பட்டுள்ள புதிய அரசியற் சாசனத்தில், அதிகாரப் பகிர்வுகள் உட்பட அனைத்து விடயங்களும் சாசனத்தின் மூலம் உத்தரவாதப்படுத்தப்பட வேண்டும்.

குறிப்பாக, இனப்பிரச்சினை சம்பந்தமாகவே பிரேரிக்கப்பட்டுள்ள வட கிழக்கு சுயாட்சிப்பிரதேசம் தொடர்பான எந்த ஓர் அரசியற் சாசனத் திருத்தமாயினும், பாராளுமன்றத்தின் சாதாரண பெரும்பான்மை மூலமோ அல்லது மூன்றிலிரண்டு பெரும்பான்மைமூலமோ அல்லது தேசியளவிலான சர்வஜன வாக்கெடுப்பு மூலமோ கூட மாற்றப்பட முடியாதவையாக இருக்க வேண்டும். அவ்வாறு செய்யப்படுமாயின், அது இன்று நிலவும் பெரும்பான்மைவாதப் போக்கை மீண்டும் ஏற்படுத்துவதாகும்.

ஏற்றுக்கொள்ளக் கூடிய ஓர் அரசியற் சாசனம் கொண்டுவரப்பட்ட பின், இனப் பிரச்சினை தொடர்பான எந்த ஓர் அரசில் சாசன மாற்றமாயினும் அது வட கிழக்கு சுயாட்சியலகின் சட்டவாக்க சபையின் மூன்றிலிரண்டு பெரும்பான்மை ஆதரவைப் பெற வேண்டும்.

வட-கிழக்குப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காகவே அதிகாரப் பகிர்வு என்ற விடயம் இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டது. ஆனால் சிங்கள மக்கள் பெருமளவில் அதிகாரப் பகிர்வை எதிர்பார்க்கவில்லை. எனவே எல்லா மாகாணங்களையும் ஒரே கணக்கில் எடுத்துக்கொண்டு, வட-கிழக்கிற்கான அதிகாரப் பகிர்வின் முக்கியத்துவத்தைக் குறைப்பதாக (dilute) ஆகிவிடக் கூடாது எனக் கூறப்பட்டதுடன், இலங்கை ஜனநாயக சமஷ்டிக் குடியரசுக்குள் வடகிழக்கு இணைந்த ஓர் சுயாட்சிப் பிராந்தியம் உருவாக்கப்படுவதே இன்றைய பிரச்சினைக்கு தீர்வாக இருக்கும் எனவும் வலியுறுத்தப்பட்டது.

அரசியல் யாப்பைத் திருத்துவதற்கான பாராளுமன்ற தெரிவுக்குழுவின் தலைவர் ஜி.எல். பீரிஸ் அவர்களுக்கு முன்னாள் வடகிழக்கு மாகாண முதலமைச்சர் அ. வரதராஜப்பெருமாள் அனுப்பியிருக்கும் கடிதத்திலிருந்து.....

கௌரவ ஜி.எல். பீரிஸ்
சட்டம்-அரசியலமைப்புச் சட்ட அமைச்சர்

1995 பங்குனி 15ம் திகதி பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் அரசியலமைப்புத் தொகுப்பு தொடர்பாக ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி தனது ஆலோசனைகளை நேரடியாகத் தங்களுடன் விவாதித்தபோது, ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைமையிலான வட-கிழக்கு மாகாண அரசின் அனுபவங்கள், அதிகாரப் பகிர்வு தொடர்பாக செய்ய வேண்டியவற்றையும் பிரச்சினைகளையும் புரிந்துகொள்ள மிகவும் அவசியமானது என நீங்கள் கேட்டிருந்ததையிட்டு மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். அதன் அடிப்படையிலும், முன்னாள் வட-கிழக்கு மாகாண அரசின் முதல்வர் என்ற முறையிலும் சில அடிப்படைக் கொள்கைகள் தொடர்பாக எனது எண்ணக் கருத்துக்களை எழுதுகிறேன்.

ஜனாதிபதி சந்திரிகா அவர்களின் முதலாவது கொள்கை விளக்க உரையிலும் ஏனைய உரைகளிலும், பேட்டிகளிலும் விபரித்த சில அடிப்படைக் கருத்தமைப்புக்களுடன் நான் உடன்படுகிறேன். அவையாவன;

1. ஒன்றுபட்ட இலங்கைக்குள் அதிகளவிலான அதிகாரப் பகிர்வு

2. சிங்கள தமிழ் மக்களின் நியாயமான பயத்தினைப் போக்கும் வகையில் மாகாண எல்லைகளை மீள வரையறுத்தல்

3. வெறும் வார்த்தைஜாலங்களோ, ஏமாற்று வார்த்தைகளோ இன்றி அரசியற் தீர்வின் உள்ளடக்கத்தினை வலியுறுத்திக் கூறுதல்

4. புலிகளுடனோ, அவர்களின்றியோ அரசியற் தீர்வுத்திட்டத்தை முன்னெடுத்தல்

5. அனைத்து தமிழ் அரசியற் கட்சிகளுடனும் கலந்தாலோசித்தல் என்பனவாகும்.

இனப்பிரச்சினைக்கான அரசியலமைப்புத் திட்ட, அரசியற் திட்டச் சீர்திருத்த நடைமுறைகள் முடிந்தாலும், இன்னும் ஓர் பெரிய பிரச்சினை எஞ்சியிருக்கும். வட-கிழக்கில் இப்போதுள்ள "ஆளுநர் ஆட்சி", தெரிவு செய்யப்பட்ட பிராந்திய சட்டசபைக்கு அதிகாரம் மாறுதல், பிராந்திய அரசை அமைத்தல் ஆகியவற்றையே நான் இங்கு குறிப்பிடுகிறேன். எனது கருத்துப்படி தற்போதுள்ள "ஆளுநர் ஆட்சி" எந்தவகையிலும் திருப்தியற்ற வகையிற் செயற்படுகிறது. எனக்குக் கிடைத்த அறிக்கைகளின்படி மோசமான அசமந்தப் போக்கும், ஆற்றலின்மையும், பெரும் ஊழலும் தற்போதுள்ள வட-கிழக்கு மாகாண நிர்வாகத்தில் நிலவுவதைக் காட்டுகிறது. முன்னைய அரசாங்கமே இந்த நிலமைக்குப் பொறுப்பெனினும் இன்னும் அவை சீர் செய்யப்படவில்லை.

எனவே மக்களால் தெரிவுசெய்யப்பட்ட பிராந்திய சட்டசபையும், நிறைவேற்று அதிகாரமும் கொண்ட தலைமையும் (முதலமைச்சரும் மந்திரிசபையும்) செயற்படத் தொடங்கும்வரை ஓர் இடைக்கால ஏற்பாட்டைச் செய்ய வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்விடைக்கால ஏற்பாடு, ஓர் அரசியல் நிர்வாக சபை என்ற வடிவத்தில் அமையலாம். இச்சபை: 1) ஆளுநர், 2) வட-கிழக்கிற் செயற்படும் அரசியற் கட்சிகள், 3) நன்மதிப்பு பெற்ற தொண்டர்ஸ்தாபனப் பிரதிநிதிகளும் அமைதிக்குழுப் பிரதிநிதிகளும், 4) பொது நிர்வாகம் அரசியற் சட்டம் மற்றும் சட்டத்துறையில் தமது சிறப்பான சேவையால் பெயர்பெற்ற முக்கியஸ்தர்கள், 5) பிரதம செயலாளர் ஆகியோரை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும்.

மேற்கூறப்பட்ட அரசியல் நிர்வாக சபையின் கடமைகளாக பின்வரும் அம்சங்கள் அமையலாம்:

1. வட-கிழக்கில் அரசியற் தீர்வையும், அதிகாரப் பகிர்வையும் நடைமுறைப்படுத்துவதை உத்தரவாதப்படுத்த வேண்டும்.

2. புனர்வாழ்வு, புனர் நிர்மாண வேலைகளை நடைமுறைப்படுத்தல்.

3. பிராந்திய சட்டசபைக்கான சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தல் நடத்தக்கூடிய சூழ்நிலைகளை விரைந்து தோற்றுவித்தல்.

4. பிராந்திய நிர்வாகக் கட்டமைப்பை ஏற்படுத்த வேண்டும். மேம்படுத்தப்பட்ட அதிகாரப் பகிர்வை இது செயற்படுத்தும் தகைமையுடையதாக இருக்க வேண்டும்.

4. அப்பிராந்தியத்தில் வாழும் அனைத்து தேசிய இன, மத மக்கள் மத்தியிலும் நம்பிக்கையைக் கட்டியெழுப்பும் வகையிலான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும், அத்துடன் தேசிய ஒருமைப்பாட்டையும் நல்லிணக்கத்தையும் வளர்க்கும் வகையிலான நடவடிக்கைகளில் மத்திய அரசுடன் இணைந்து செயற்பட வேண்டும்.

முடிவாக, நீண்டகாலமாகத் தொடர்ந்து கொண்டிருக்கும் புரையோடிப்போய் விட்ட இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு சிங்கள தமிழ் மக்கள் அனைவருக்கும் கிடைத்துள்ள இச் சந்தர்ப்பம் பற்றி நான் அதிகம் கூறத்தேவையில்லை. சுதந்திர இலங்கையின் வரலாற்றில் இந்நாட்டில் வாழும் சிங்கள தமிழ் மக்கள் இரு தனித்துவமான, சமமான சமுதாயங்கள் என்பதனையும், இக்கொள்கையின் அடிப்படையில் தேசிய அரசியலில் அவர்கள் ஒன்றுபட வேண்டும் என்றும் தெளிவாக அறிவித்த இந்நாட்டின் முதல் தேசத்தலைவரை நாம் பெற்றது எமது அதிர்ஷ்டம் என்பதே என் கருத்தாகும்.

இச்சந்தர்ப்பம் வீணாகிப்போக நாம் அனுமதிக்கக்கூடாது.

தங்கள் உண்மையுள்ள
அ. வரதராஜப்பெருமாள்

## ஆற்றல்மிகு தோழர்களே....

(முன்பக்கத் தொடர்ச்சி)

### பாசமிகு தோழர்களே!

அடக்குமுறைகள், இன ஒடுக்கல்கள், திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் ஆகியவற்றிற்கு எதிரான தமிழ் மக்களின் நீதியான கோரிக்கைகளை உள்ளடக்கிய போராட்டம் தான் தனிநாட்டுக்கான எமது போராட்டமாக உருவெடுத்தது.

முன்னின்று போராடிய பல்வேறு தமிழ் இயக்கங்களைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான போராளிகள் தம் உயிரையே இதற்காகத் தியாகம் செய்தனர். முழுத் தமிழ் மக்களுமே எமது உரிமைப் போராட்டத்திற்கு ஆதரவாகச் செயற்பட்டனர்.

ஆனால், தாம் மட்டுமே தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகளாக இருக்க வேண்டும் என்று விரும்பிய தமிழீழ விடுதலைப் புலிகள், தமது ஆயுத பலத்தால் சகல இயக்கங்களையும் அழித்தொழிக்க முற்பட்டனர். இதனால் அடக்குமுறைக்கு எதிரான போராட்டம் என்ற நிலை மாறி, தமக்குள் தாமே மோதிக் கொள்ளும் நிலை ஏற்பட்டது.

மக்களது நலன்களுக்கு அப்பாற்பட்ட இக் குறுகிய மனோபாவமானது, இன்று தமது இயக்க மேலாண்மையை மக்கள்மீது நிலை நாட்டுவதற்கான ஓர் போராட்டம் என்ற வட்டத்துக்குள் சுருங்கி விட்டது.

### அன்புக்குரிய தோழர்களே!

1987 ஆம் ஆண்டு இந்திய இலங்கை ஒப்பந்தத்தினூடாக தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான ஓர் முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

இதில் தமிழ் மக்களுக்கு ஆதரவாகவே இந்தியா செயற்பட்டது. தமது இயக்க மேலாண்மைக்கு அச்சுறுத்தலாகும் என்ற ஒரே காரணத்துக்காக, எமது நண்பர்களாகச் செயற்பட்ட இந்தியாவையே புலிகள் விரோதிகளாக்கிக் கொண்டார்கள்.

புலிகளின் தவறான அணுகுமுறைகளால், தமிழ் மக்கள் பெற்றிருக்க வேண்டிய உரிமைகளைப் பெற முடியாதது மட்டுமல்ல, பெற்றுக் கொண்ட பல அதிகாரங்களையும் இழக்க வேண்டியேற்பட்டது.

புலிகளின் இக்குறுகிய எண்ணத்தின் அடிப்படையிலான நடவடிக்கைகளால், தமிழ் மக்களின் நட்பு சக்தியான இந்தியாவின் நட்பும் இல்லாமல் போனது.

புலிகள் பலமாக எதிர்த்த போதும்கூட, 1987 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் ஊடாகத்தான் நாம் திருகோணமலையை வட கிழக்கு மாநிலத்தின் தலைநகரமாக்கினோம். இன்று எவ்வளவுதான் சிங்களக் குடியேற்றங்கள் நடைபெற்ற போதிலும், அது தமிழ் மக்களின் தலைநகரம் என்ற நிலையிலிருந்து அதனை யாராலும் மாற்ற முடியாது.

அன்றைய நிலைமைகள் சுமுகமாக இருந்திருக்குமாயின், திருகோணமலை இன்று அழகிய, வளம்பெற்ற தமிழ்த் தலைநகரமாக உயர்ந்திருக்கும். ஆனால் புலிகளின் தூர நோக்கற்ற நடவடிக்கைகளால் எமது இம் முயற்சிகள் யாவும் பாழடிக்கப்பட்டது.

அன்றைய எமது முயற்சிகளை பிரேமதாசா அரசுடன் இணைந்து சீர்குலைத்தவர்கள், பின்னர் அதனு டனேயே ஓர் யுத்தத்தைத் தொடங்கினார்கள்.

அந்த அநாவசிய யுத்தத்தின் மூலம் லட்சக்கணக்கான மக்கள் அகதிகளாக்கப்பட்டதும், பல்லாயிரக்கணக்கானோர் படுகொலை செய்யப்பட்டதும், இன்னும் ஆயிரக்கணக்கான அனாதைகளும் விதவைகளும் உருவாக்கப்பட்டதும், கோடிக்கணக்கான சொத்துக்கள் அழிக்கப்பட்டதும்தான் இவர்களால் சாதிக்க முடிந்ததே தவிர, மக்கள் நலனுக்காக எதனையும் சாதிக்க முடியவில்லை.

### தோழர்களே!

சுதந்திர இலங்கையின் வரலாற்றில் தமிழ் மக்களின் நம்பிக்கையைப் பெற்றுக்கொண்ட, தமிழ் மக்களுக்கு பல பிரச்சினைகள் உண்டு என்று ஏற்றுக்கொண்டு அதற்கு அரசியல் தீர்வுதான் ஒரேவழி என்பதை மீண்டும் மீண்டும் வலியுறுத்திய இன்றைய ஜனாதிபதியுடன், ஓர் ஆரோக்கியமான பேச்சுவார்த்தையை நடத்தி தமிழ் மக்களின் முழு உரிமைகளையும் வென்றெடுப்பதற்குப் பதிலாக, (6

தமது குறுகிய இயக்க நலன்களுக்காக இனத்தையே பகடைக் காய்களாக்கும் புலிகளின் போக்கை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது.

படிப்பகம்

www.padippakam.com



# இனிய தமிழ் மக்களே!...

## அன்பான தமிழ் பேசும் மக்களே!

புலிகளின் திருகோணமலை கடற்படைப் படகுத் தாக்குதலால் தகர்க்கப்பட்டது கடற்படைப் படகுகள் மாத்திரம் அல்ல. அத்துடன் தமிழ் மக்களின் எதிர்பார்ப்பு, அவர்களின் விருப்பு போன்றவையும் புலிகளால் தகர்க்கப்பட்டது.

90ம் ஆண்டு, அப்போதைய ஜனாதிபதி பிரேமதாசா அவர்களுடன் தொடரப்பட்ட பேச்சுவார்த்தையும், அற்ப காரணத்துக்காக இவர்களால் முறிக்கப்பட்டது. அதைப்போன்றே இன்றும் பேச்சுவார்த்தை புலிகளால் முறிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தைப் பொறுத்தவரை அவர்கள் அதிகாரத்துக்கு வந்த உடனேயே, புலிகளுடன் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்கு முன்னரே, சில பொருட்களின் தடையை நீக்கினர். பின்னர் புலிகளுடன் தொடர்ந்த பேச்சுவார்த்தையில் மிகுதிப் பொருட்களின் தடையும் நீக்கப்பட்டது.

> தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் புலிகள் திட்டமிட்டே குழப்பி வந்துள்ளார்கள். இந்தியா தலையிட்டபொழுது எமது பிரச்சினை சுமுகமாகத் தீர்ந்திருக்கும், அதனை புலிகள் குழப்பினர். பின்னர் புலிகள் பிரேமதாசாவுடன் பேசினார்கள். எந்த உரிமைகளையும் பெறாமலே அதனையும் குழப்பி மீண்டும் யுத்தத்தை தொடக்கினர். இன்று சந்திரிகாவுடன் பேசி ஓர் முழுமையான தீர்வைக் காணக்கூடிய ஓர் அரிய சந்தர்ப்பத்தை பாழ்படுத்தியுள்ளனர். இதன்மூலம், யுத்தத்தில் அவர்கள் கொண்டுள்ள வெறித்தனத்தைத்தான் உலகுக்கு வெளிப்படுத்தியுள்ளனர்.

மொத்தத்தில் வட மாகாணத்திற்கு விதிக்கப்பட்டிருந்த பொருளாதாரத் தடை பெரும்பாலும் அகற்றப்பட்டது. இதனைப் போன்றே வட-கிழக்கு கடலில் மீன்பிடித் தடையும் அகற்றப்பட்டது. மீனே இல்லாமலிருந்த யாழ்ப்பாணத்தில் மீனின் விலை கிலோ 30 ரூபா அளவுக்கு குறைந்தது.

பூநகரி முகாமும், பொதுமக்களுக்கு அச்சுறுத்தல், துன்புறுத்தல் இல்லாத வகையில் 600 மீற்றர் வீதியில் இருந்து பின் தள்ளப்பட்டது.

புலிகளின் 4 கோரிக்கைகளில் 3 கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டன. கிழக்கு மாகாணத்தில் புலிகள் ஆயுதங்களுடன் உலாவர வேண்டும் என்ற கோரிக்கை தவிர ஏனையவை நிறைவேற்றப்பட்டன. இதில் பூநகரி இராணுவ முகாமை முழுமையாக அகற்றுதல், இராணுவ, கடற்படை முகாம்களுக்கு முன்னாலும் மீன்பிடிக்க அனுமதி கேட்பதெல்லாம், பேச்சுவார்த்தையை குழப்புவதற்கான முயற்சியே தவிர வேறல்ல.

## அன்பார்ந்த மக்களே!

புலிகளுக்கென் ஓர் வரலாறு உண்டு. அதை அவர்கள் தொடர்வதுதான் கவலைக்குரியது. தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் புலிகள் திட்டமிட்டே குழப்பி வந்துள்ளார்கள். இந்தியா தலையிட்டபொழுது எமது பிரச்சினை சுமுகமாகத் தீர்ந்திருக்கும், அதனை புலிகள் குழப்பினர்.

பின்னர் புலிகள் பிரேமதாசாவுடன் பேசினார்கள். அப்பொழுதும், எந்த உரிமைகளையும் பெறாமல் அதனையும் குழப்பி மீண்டும் யுத்தத்தை தொடக்கினர். இன்று சந்திரிகாவுடன் பேசி ஓர் முழுமையான தீர்வைக் காணக்கூடிய ஓர் அரிய சந்தர்ப்பத்தை பாழ்படுத்தியுள்ளனர். இதன்மூலம், யுத்தத்தில் அவர்கள் கொண்டுள்ள வெறித்தனத்தைத் தான் உலகுக்கு வெளிப்படுத்தியுள்ளனர்.

மக்களின் விருப்பங்கள், எதிர்பார்ப்புகள் யாவும் இவர்களால் குழிதோண்டிப் புதைக்கப்பட்டுள்ளது. கடந்த சில மாதங்களாக அவர்கள் அனுபவித்துவந்த குறைந்தபட்ச நிம்மதி சீர்குலைக்கப்பட்டுள்ளது.

பேச்சுவார்த்தையில் இருந்து விலகியதற்கும், உடனடியாகவே யுத்தத்தை ஆரம்பித்ததற்கும், நியாயமான காரணங்கள் எதுவுமே கிடையாது. மக்களை முட்டாள்களென நினைத்து இவர்களால் புனையப்பட்டு கூறப்படும் காரணங்கள் யாவும் அர்த்தமற்றவையும் சிரிப்புக்குரியவையுமேயாகும்.

## அன்பிற்கினிய மக்களே!

மீண்டும் தொடங்கிய இந்த யுத்தத்தின் மூலம் இவர்கள் எதனைச் சாதிக்க முயல்கின்றார்கள்? இவர்களது இயக்க உறுப்பினர்களின் கருத்துப்படி பார்த்தால் இனி நடைபெறப்போவது – இல்லையேல் இன்று ஆரம்பமாகியுள்ளது தமிழீழத்துக்கான இறுதி யுத்தம். இதில் தாம் வென்று தமிழீழத்தை நிறுவுவோம் என்ற மிகவும் சிறுபிள்ளைத்தனமான கருத்தை தமது இயக்க உறுப்பினர்களுக்கு ஏற்படுத்தியுள்ளார்கள்.

இவர்கள் தமது இயக்க உறுப்பினர்கட்கு தமிழீழமே இறுதி முடிவு என்று போதிக்கும் அதேசமயம் பாலசிங்கம், பிரபாகரன் போன்றோர் சமஷ்டி முறையைத் தாம் பரிசீலிக்கத் தயார் என்றும் கூறிவந்தனர். அதேசமயம் அரசாங்கத்துடன் நடந்துவந்த பேச்சுவார்த்தையில் அரசியற் தீர்வு தொடர்பாக பேசுவதற்கு அவர்கள் பின்வாங்கினார்கள்.

புலிகளே தமது பல்வேறு அறிக்கைகளில் தாம் அரசியற் தீர்வு தொடர்பாக பேசுவதற்கு தயாராக இல்லை என்பதை மீண்டும் மீண்டும் குறிப்பிட்டு வந்துள்ளார்கள்.

உண்மையில் அமைதி, சமாதானம், தமிழ் மக்களின் சுபிட்சமான எதிர்காலம் என்பவற்றைக் கவனத்தில் எடுத்திருப்பார்களேயாயின் இவர்கள் மீண்டும் ஓர் யுத்தத்தைத் தொடங்கியிருக்கமாட்டார்கள்.

புலிகளைப் பொறுத்தவரை இன்றிருக்கக் கூடிய சூழ்நிலை மாறி ஓர் ஜனநாயக சூழல் ஏற்படுமேயாயின் அவர்களது பாதுகாப்பு, அரசியல் எதிர்காலம் யாவுமே கேள்விக்குள்ளாகிவிடும் என அஞ்சுகின்றனர்.

யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை இன்று அவர்கள் வைத்ததே சட்டம். வரி அறவிடுதல், மிரட்டிப் பணம் பறித்தல், வீடுகள் சொத்துக்களை அபகரித்தல் என்று மிகவும் சுகபோகமான வாழ்க்கையே நடாத்தி வருகின்றனர். பேச்சுவார்த்தையின் மூலம் சமாதானம் ஏற்படும் பட்சத்தில் இவை யாவும் கேள்விக்குரியதாகிவிடும்.

> ஒரு தேசிய இனம் என்ற அடிப்படையில் எமக்குள்ள நியாயமான பிரச்சினைகளையும் ஆயுதபலத்தால் புலிகள் தமது கையிலெடுத்து, அதனைப் பிரதிபலிக்கும் ஏகப்பிரதிநிதிகள் தாங்களே எனக் கூறிக்கொண்டு, தமிழீழத்தின் உண்மையான விசுவாசிகள் என்ற பேரால் - தமிழ் மக்கள் கொஞ்சநஞ்ச உரிமைகளையும் பெறமுடியாமற் சீரழிப்பதையே சாதித்துள்ளனர். முடிவேயில்லாத வதைபட்டுச் சாகும் வாழ்க்கையினையே தமிழ்மக்களுக்குத் தொடர்ந்தும் வழங்கிவருகின்றனர். அவர்களது அரசியற் தூரநோக்கோ, ராஜதந்திரமோ அற்ற நடவடிக்கைகள் காரணமாக அனுதாபத்துடன் பார்க்கப்பட்ட எமது நியாயமான கோரிக்கைகள் கூட இன்று அதன் வலிமை இழந்து செல்கின்றது

இன்று மிகப்பெரியஆயுதக்குழுவின் பாதுகாப்புடன் பவனிவரும் இவர்கள் ஓர் ஜனநாயக சூழலில், இவற்றை இழக்க நேரிடலாம். அச்சமயத்தில் தமக்குப் பாதுகாப்பு இருக்காது எனவும் இவர்கள் அஞ்சுகின்றனர்.

இவை மாத்திரமின்றி இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தியும், இலங்கையின் முன்னாள் ஜனாதிபதியும், பல பெருந்தலைவர்களும் இன்னும் பல்வேறு கட்சி உறுப்பினர்களும், கல்விமான்கள், அதிகாரிகள் பொது மக்கள் என அனைத்துத் தரப்பினரும் பிரபாகரனாலும் அவர்களது மேல்மட்டத் தலைவர்களினாலும் படுகொலை செய்யப்பட்டனர் என்பதும் பகிரங்கமானதே.

இதனால் இவர்களில்எவராலாவது தனது உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்படலாம் என பிரபாகரன் எண்ணுவது விளங்கிக் கொள்ளக் கூடியதே. இதிலும் முக்கியமாக இந்தியா தன்னைப் பழிவாங்கும் என இவர் அஞ்சுவதும் யாவரும் அறிந்ததே.

ஆகவே இன்றிருக்கக்கூடிய சூழல்தான் தனக்கும் தனது சகாக்களுக்கும் பாதுகாப்புத் தரக்கூடிய ஓர் சூழல் என்பதில் பிரபாகரன் தெளிவாகவே இருக்கின்றார்.

ஆகவே இந்தச் சூழல் மாறி ஜனநாயக உரிமைகளுடன் கூடிய ஓர் சமாதான சூழ்நிலை தோன்றுவதற்கு இவர்கள் அனுமதிக்க மாட்டார்கள். அப்படியான பேச்சுவார்த்தைகளை அனுமதிப்பதென்பது தமக்குத் தாமே குழிபறிப்பதாகவே அவர்கள் உணர்கிறார்கள்.

## மக்களே!

இதுதான் இன்றைய யதார்த்த சூழ்நிலை. தமது சொந்தப் பாதுகாப்பு, தமது எதிர்காலம் என்பவற்றை மாத்திரம் கருத்திற்கொண்டு அதற்காக முழுத் தமிழ்ச் சமூகத்தையும் பகடைக்காய்களாக்கி அவர்களை அழிவுக்கு இட்டுச் செல்வதை நாம் அனுமதிக்கப் போகிறோமா?

கடந்த ஒரு தசாப்தமாக நாம் இழந்த உயிர்கள், சொத்துக்கள், குடும்ப சமுதாய கலாச்சார சீரழிவுகள் எண்ணிலடங்காதவை. இவற்றையே தொடர்வோம் என வெறித்தனமாக நிற்கும் ஓர் கூட்டத்திடம் எமது எதிர்காலத்தையும் எதிர்கால சந்ததியையும் ஒப்படைக்கப் போகிறோமா?

## அன்பான மக்களே!

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியினராகிய நாமும், எமது மக்களின் விடிவு தனிநாடு ஒன்றிலேயே சாத்தியம் என்ற அடிப்படையில் 1987ம் ஆண்டுவரை அதற்காகவே போராடினோம். ஆனால் மாறிவரும் பிராந்திய, பூகோள அரசியல் சூழ்நிலைகளைக் கவனமாகப் பரிசீலித்தே எமது மக்களின் கௌரவமானதும் நியாயமானதுமான எதிர் ☞

## "எல்.ரி.ரி.ஈ. தமிழ் மக்களுக்கு துரோகம் செய்துவிட்டது" - வாசு



சமாதானத்தை ஏற்படுத்துவதற்கிருந்த சிறந்த சந்தர்ப்பத்தை மீறி, போர் தவிர்ப்பு ஒப்பந்தத்தை முறித்துக்கொண்டு விடுதலைப் புலிகள் மீண்டும் யுத்தத்தை ஆரம்பித்திருப்பது பெரும் தவறாகும். தமிழ்மக்களைப் பாதிக்கும் இந்தத் தீர்மானத்தை எல்.ரி.ரி.ஈ. எடுத்திருப்பது தவறானது. வடக்கில் மக்களது வாழ்க்கையை சகஜ நிலைக்குக் கொண்டுவருவதற்கு தாமதங்கள் நிலவியது உண்மை. அரசாங்கம் இதனைத் துரிதப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். இதனைக் காரணமாகக் காட்டி எல்.ரி.ரி.ஈ. செயற்பட்டது ஏன்? இதுகுறித்து எல்.ரி.ரி.ஈ.யினர் நாட்டுக்கும் மக்களுக்கும் பதிலளித்தாக வேண்டும்.

நாட்டில் நல்லதொரு சூழ்நிலை உருவாகியிருக்கும் நல்ல சந்தர்ப்பம் இதுவாகும். இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்துவதற்கு த்வறியதன் மூலம் எல்.ரி.ரி.ஈ. தமிழ்மக்களுக்கு துரோகம் செய்துவிட்டது என்றே நான் கூறுவேன். எல்.ரி.ரி.ஈ.யின் இந்தச் செயலுக்கு உண்மையில் பதிலளிக்க முடியாது.

இராணுவத்தினர் தமிழ்மக்கள் மீது மேற்கொண்ட அநியாயமான தாக்குதல்கள், அத்துமீறல் நடவடிக்கைகளால் தமிழர்களின் பாதுகாவலரென்ற அந்தஸ்து புலிகளுக்கு கிட்டியது. இதனைப் பயன்படுத்த எல்ரி.ரி.ஈ. தமிழ் மக்களை ஒரு கட்டுப்பாட்டுக்குள் வைத்தது. அங்கு சுதந்திரம் இருக்கவில்லை. ஏகாதிபத்திய முறையிலே நடாத்தி வந்தது. அண்மைக்காலமாக உருவாகிய நிலைமை காரணமாக கட்டுப்பாடுகள் அகலும் நிலை உருவாகத் தொடங்கியது. போக்குவரத்து வசதிகள் அதிகரித்து, பொருட்களுக்கிருந்த தட்டுப்பாடுகளும் நீங்க ஆரம்பித்ததும் தமது ஆதிபத்தியத்தைத் தொடருவதற்கு முடியாத நிலை உருவாகுமென்று உணர்ந்தே எல்.ரி.ரி.ஈ. இத் தீர்மானத்தை எடுத்திருக்கலாம் என்று நான் கருதுகின்றேன். குண்டுகள் வெடிக்காத சுதந்திரமான நிலை உருவாகுமாயின் வடக்குக்கு கடுமையான ஆட்சி ஏனென்று மக்கள் கேட்க முற்படுவார்கள். இதனை உணர்ந்தே மீண்டும் எல்.ரி.ரி.ஈ. போராட்டத்தை ஆரம்பித்திருக்கலாமென நான் கருதுகின்றேன்.

அதேபோன்று தென்னிலங்கை மக்கள் மத்தியில் இனவாதமற்ற ஒரு சூழ்நிலை உருவாகியிருக்கிறது. இந்நிலையில் இத் தேசியப் பிரச்சினையைப் பேச்சுவார்த்தை மூலம் தீர்த்துக்கொள்ள முடியும் என்ற நம்பிக்கை வளர்ந்து வருகின்றது. போராட்டமின்றி இப்பிரச்சினைக்குத் தீர்வு காணலாம் என்ற மனோபாவம் தமிழ் மக்கள் மனதில் வளரும்போது தமது செல்வாக்கு குறைந்துவிடும் என்பதற்காகவும் போராட்டம்தான் விமோசனம் எனக்கூறி எல்.ரி.ரி.ஈ. மீண்டும் போராட்டத்தை ஆரம்பிக்க முற்பட்டிருக்கலாம்.

– வாசுதேவ நாணயக்கார எம்.பி. (நன்றி: தினகரன்)

படிப்பகம்

www.padippakam.com



காலத்திற்கு பேச்சுவார்த்தை மூலமான தீர்வே சாத்தியம் என்ற முடிவுக்கு வந்தோம்.

இதனடிப்படையிலேயே வட-கிழக்கில் மாகாண அரசொன்றை நிறுவினோம். ஆனால் இவை யாவும் பிரேமதாசா அரசின் உதவியுடன் புலிகளால் சீர்குலைக்கப்பட்டது. நாம் உருவாக்கிய வட-கிழக்கு மாகாண நிர்வாகம் இன்றும் செயற்பட்டு வருவதை நீங்கள் அறிவீர்கள்.

> இன்றிருக்கக்கூடிய சூழல்தான் தனக்கும் தனது சகாக்களுக்கும் பாதுகாப்புத் தரக்கூடிய ஓர் சூழல் என்பதில் பிரபாகரன் தெளிவாகவே இருக்கின்றார். ஆகவே இந்தச் சூழல் மாறி ஜனநாயக உரிமைகளுடன் கூடிய ஓர் சமாதான சூழ்நிலை தோன்றுவதற்கு இவர்கள் அனுமதிக்க மாட்டார்கள். அப்படியான பேச்சுவார்த்தைகளை அனுமதிப்பதென்பது தமக்குத் தாமே குழிபறிப்பதாகவே அவர்கள் உணர்கிறார்கள்.

ஆனால புலிகளைப் பொறுத்தவரை அரசியல் யதார்த்தங்களைக் கணக்கிலெடுக்க மறந்தது மாத்திரமின்றி ராஜீவ்காந்தியைக் கொலை செய்ததன் மூலம் இந்தியாவை எமக்குப் பகையாக ஆக்கிக் கொண்டார்கள்.

உண்மையில் தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளை பெற்றுக்கொடுப்பதற்கு இந்தியா எப்போதும் எமக்கு உதவியாகவே இருந்துவந்தது. அதை இன்னோர் வகையில் கூறினால் இந்தியா எப்போதுமே இலங்கைத் தமிழ் மக்களின் நண்பனாகவே செயற்பட்டு வந்தது. இதனால் இலங்கை அரசின் எதிர்ப்பைச் சம்பாதித்துக்கொண்டது.

எமக்காக உலக அரங்குகளிலெல்லாம் குரல் கொடுத்த ஒரே நண்பனையும் இழந்து, இங்கு தமிழ் மக்களுக்கு என்ன தீங்கு நடந்தாலும் கேட்க உலகில் யாருமற்ற நிலையைத் தான் புலிகள் தோற்றுவித்துள்ளனர்.

ஒரு தேசிய இனம் என்ற அடிப்படையில் எமக்குள்ள நியாயமான பிரச்சினைகளையும் ஆயுதபலத்தால் புலிகள் தமது கையிலெடுத்து, அதனைப் பிரதிபலிக்கும் ஏகப்பிரதிநிதிகள் தாங்களே எனக் கூறிக்கொண்டு, தமிழீழத்தின் உண்மையான விசுவாசிகள் என்ற பேரால் – தமிழ் மக்கள் கொஞ்சநஞ்ச உரிமைகளையும் பெறமுடியாமற் சீரழிப்பதையே சாதித்துள்ளனர். முடிவேயில்லாத வதைபட்டுச் சாகும் வாழ்க்கையினையே தமிழ்மக்களுக்குத் தொடர்ந்தும் வழங்கிவருகின்றனர்.

அவர்களது அரசியற் தூரநோக்கோ, ராஜதந்திரமோ அற்ற நடவடிக்கைகள் காரணமாக அனுதாபத்துடன் பார்க்கப்பட்ட எமது நியாயமான கோரிக்கைகள் கூட இன்று அதன் வலிமை இழந்து செல்கின்றது.

எமது நியாயமான பிரச்சினைகளையும், அது தொடர்பான கோரிக்கைகளையும் வென்றெடுப்பதற்கான பல்வேறு சந்தர்ப்பங்களையும் இவர்கள் சீர்குலைத்தே வந்துள்ளனர். இதன்மூலம் அரசியற் தூரதிருஷ்டியோ, சமூகப் பொறுப்போ தமக்கு இல்லை என்பதைத்தான் இவர்கள் மீண்டும் மீண்டும் நிரூபித்துள்ளனர்.

### அன்பார்ந்த தமிழ் மக்களே!

புலிகளைத் தாக்குவதன் மூலம் அற்ப சந்தோசம் பெறுவதற்காக இவற்றையெல்லாம் நாம் எழுதவில்லை. மாறாக கடந்தகால அனுபவங்களினடிப்படையில் அவர்களது உண்மையான சிந்தனையோட்டங்களை நீங்கள் இப்போதாவது சரியாக அடையாளம் காணவேண்டும் என்பதற்காகவே இவற்றை ஓரளவு விளங்கப்படுத்துகிறோம்.

அதன்மூலம் சரியான முடிவுகளை நோக்கி அணிதிரள்வதன் மூலம் தவறான சக்திகளைப் பலவீனப்படுத்தி சரியான சக்திகளை வலுப்படுத்தி குறிக்கோளை எய்த முடியும்.

**மக்கள் பிரச்சினைகளிற் குளிர்காயும் சுயநலமிகளை அடையாளம் காண்போம்! மக்கள் நலனை முன்னெடுக்கும் சக்திகளை வலுப்படுத்துவோம். இதுவே இன்றைய கோசமாகட்டும்.**

## "வன்முறையற்ற சமுதாயத்தினை அமைக்க வாருங்கள்!"

### – சமாதானம் கோரும் பெண்கள் அமைப்பு வேண்டுகோள்

அமைதிக்கான முன்முயற்சிகளில் ஈடுபட்டுவரும் முற்போக்கு சக்திகள், இரண்டு கடற்படைப் படகுகள் மீதான புலிகளின் தாக்குதலால் தமது அமைதிக்கான முயற்சிகளில் துவண்டு போய்விடக் கூடாது என அமைதிக்கான பெண்கள் அமைப்பு கேட்டுக் கொள்கிறது. மிக மோசமான முன்னைய காலகட்டங்களிலேயே அமைதிக்கான பெண்கள் அமைதிக்கான கோஷத்தைத் தொடர்ந்து உயர்த்திப் பிடிக்க முடிந்துள்ளது. சமூக நல்லிணக்கம், அமைதி என்ற கோஷங்களுடனான வன்முறையற்ற சமுதாயத்திற்கான அவர்களது பகிரங்கமானதும், ஆர்வத்துடனுமான பிரச்சாரம் மூலமே இது சாத்தியமாகிறது என்று அவ்வமைப்பு பத்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவித்திருக்கிறது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது, இத்தேசத்தில் வாழும் எல்லா இன மக்களும் சுயகௌரவத்துடனும், சுதந்திரத்துடனும் வாழக்கூடிய வகையில் இனப்பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தை மூலமான, நீதியான ஓர் அரசியல் தீர்வைக்காணும் நோக்குடன் அமைதிக்கான அரசின் முன்னெடுப்புக்களுக்கு இந்நெருக்கடியான காலகட்டத்தில் எமது தொடர்ச்சியான, உறுதியான ஆதரவைத் தெரிவித்துக்கொள்கிறோம். அமைதிக்கான பெண்கள் அமைப்பு தொடர்ந்து சகல இனப்பெண்களுடனுமான தமது தொடர்பை வலுப்படுத்துவார்கள். போரக்கும் வன்முறைக்கும் எதிரான தமது நடவடிக்கைகளை அதிகரிப்பார்கள். அத்துடன், எந்த நேரமும் அமைதி மற்றும் சமாதானக் கருத்துக்களை சாதகமான முறையில் முன்னெடுத்துச் செல்வார்கள்.

போரும் வன்முறையும் பாலரீதியில் குறிப்பாக பெண்கள் மீது மிகுந்த பாதிப்பை ஏற்படுத்துகிறது என்பதனை அமைதிக்கான பெண்கள் உண்மையிலேயே அறிந்துள்ளார்கள். அத்துடன் சமுதாயத்தில் பெண்களது நிலைமை காரணமாக போரின் உடனடியான, நீண்டகால தாக்கங்களினால் மிக அதிகமாக பாதுகாப்பற்ற நிலைமைக்கும் அவர்களே ஆளாகின்றனர் என்பதையும் இவ்வமைப்பு புரிந்துகொண்டுள்ளது.


இத்தருணத்தில் இனப்பாகுபாட்டுக்கும், தப்பெண்ணங்கட்கும் எதிராக போராடுவதற்காக பல்வேறு சமூகத்தவரும் ஒருவர் மீதொருவர் நம்பிக்கை வைத்துச் செயற்படும் இன்றைய சூழ்நிலையைத் தொடர்ந்து பேணுவது அவசியம் என நாம் கருதுகின்றோம். இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சமாதானம் கோரும் பெண்கள்
58, கிரீன் பாத்
கொழும்பு 03

**ஈழவிடுதலைப் போராட்ட முன்னோடிகளில் ஒருவரும், ASSEAY எனும் இடம்பெயர்ந்த தமிழர்களின் வெளியீட்டு நிறுவனத்தின் இயக்குனருமான எஸ். சபாலிங்கம் கடந்த வருடம் மே தினத்தன்று பாரிஸில் அவர் இல்லத்தில் வைத்து புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார். அவர் நினைவாக புலம்பெயர்ந்தோர் வசிக்கும் நாடுகளிலிருந்து வெளியிடப்பட்ட பிரசுரங்களிலிருந்து....**

## பாரிஸ் நகரில் திரு. சபாலிங்கம் படுகொலை ! மாற்றுக்கருத்துக்களுக்கு படுகொலை தீர்வாகாது.

விடுதலைப் போராட்டத்தின் முன்னோடிகளில் ஒருவரும் எழுபதுகளின் ஆரம்பத்தில் முனைப்புடன் இயங்கிய தமிழ் இளைஞர் பேரவை பேரணி அமைப்புக்களின் உந்து சக்திகளில் ஒருவரும் எழுத்தாளரும் வெளியீட்டாளருமான சபாரத்தினம் சபாலிங்கம் அவர்கள் பரிஸ் நகரில் அவரது வீட்டில் வைத்து படுகொலை செய்யப்பட்டுள்ளார்.



## இசை

### எஸ். சபாலிங்கம்

- தமிழ் மாணவர் பேரவையின் ஆரம்பகால உறுப்பினர்.
- ஈழப் போராட்டத்தின் முதற்குரலாக வெளிவந்த "காவலன்" பத்திரிகையின் ஆசிரியர்களுள் ஒருவர்
- தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தில் பங்கெடுத்ததின் காரணமாக சிறைக்கொடுமைகளை அனுபவித்தவர்.
- பிரான்ஸிற்கு அகதியாக இடம்பெயர்ந்த பின்னரும் சமூகப்பணிகளில் தீவிரமாக ஈடுபட்டு வந்தவர்
- பிரான்ஸில் முதற்தமிழ் சஞ்சிகையின் தோற்றத்திற்கான முன்னோடி
- தலைசிறந்த ஆவணச் சேகரிப்பாளர்.

**சிறு பொறிகளைக்கூட கண்டு அஞ்சும் கோழைகளே**
**கொலைகளை நிறுத்துங்கள்!**
**மௌனங்கள் பேசும் நாளொன்று தோன்றும்!**

**சபாலிங்கம் அஞ்சலிக் குழு நண்பர்கள்**

## எரியும் உன் சிதை வெளிச்சம் தரட்டும்!

நண்பா!
நம் வாயிலிருந்து வருகின்ற
ஒவ்வொரு உண்மைக்கும்
ஒவ்வொரு துப்பாக்கிக் குண்டு
பரிசாகக் கிடைக்கும்
காலம் ஒன்று வருமோ?

அன்புடன் நண்பனுக்கு:

எப்படி எழுதுவது? எங்ஙனம் தொடர்வது. எழுதும் நிலையிலா நாங்கள் உள்ளோம். மண்ணையும் மக்களையும் நேசித்தவர்களால் மரணித்துப் போனவர்கள் வரிசையில் இன்று நீயும். நீ கால் பதித்த பாரிஸ் தெருக்களில் நாம். வெறுமை. எங்கும் எதிலும். உன் நினைவுகளும் கனவுகளுமே எங்களிடம் மிஞ்சியுள்ளது. உன் மரணத்தை ஜீரணிக்க தோல்வியுற்ற மனிதர்களாய் நாங்கள். நண்பா நேற்றைய அந்தக் காலங்கள் எங்கள் நினைவுகளில் பசுமையாய்....

## திரு. சபாலிங்கத்தின் படுகொலையை கண்டிக்கின்றோம்!

திரு. சபாலிங்கம் - ஈழவிடுதலைப் போராட்ட முன்னோடிகளில் ஒருவர். சிறிலங்கா பேரினவாத அரசின் மிக மோசமான சித்திரவதைகளுக்குள்ளானவர். புலம் பெயர்ந்த போதும் தேசத்தின் மீது நேசம் கொண்டவர். ஆவணச்சேகரிப்புகளில் ஆர்வம் காட்டியவர். புகலிடத்து இலக்கிய நடவடிக்கைகளில் பங்கு கொண்டவர். புகலிடத்துக்கும் ஈழத்துக்குமிடையிலான பலவேறு தொடர்புகளின் மையமாக விளங்கியவர். பலரது இணைப்புப்பாலமாகத்திகழ்ந்தவர்.

## என்று தணியும் இந்தப் படுகொலைத் தாகம்?

*இத்தகைய படுகொலைகளுக்கு எதிராக உலகமெங்கும் குரல் எழுப்பப்பட வேண்டுமென்பது மிகவும் குறைந்த பட்சத் தேவையாகும். எதிர்காலத்தில் இவ்வாறான படுகொலைகளை தடுத்து நிறுத்துவதற்காக தீவிரமாக உழைப்பதே விடுதலையை நேசிக்கும் ஒவ்வொருவரதும் கடமையாக இருக்க வேண்டும்.*

*மாற்றுக் கருத்துக்களை துப்பாக்கிக் குண்டுகளால் அழித்து விடலாம் என்று நம்புபவர்கள் வரலாற்றுக் குருடர்கள் மட்டுமே ஆவர். சபாலிங்கம் அவர்களின் பணியை இன்னும் ஒருபடி மேலெடுத்து செல்ல உழைப்பதே அவருக்கு நாம் செய்யும் அஞ்சலியாகும்.*

***

இவ் அராஜகத்துக்கெதிராகக் குரல் கொடுக்கும் புலம்பெயர்ந்த சஞ்சிகைகளும் மனித உரிமை அமைப்புக்களும்,

| | |
|---|---|
| மனிதம் (சுவிஸ்) | தாகம் (லண்டன்) |
| சமர் (பிரான்ஸ்) | ஈழபூமி (லண்டன்) |
| தூண்டில் (ஜேர்மனி) | தேடல் (கனடா) |
| சிந்தனை (ஜேர்மனி) | தாயகம் (கனடா) |
| தேனீ (ஜேர்மனி) | காலம் (கனடா) |
| ஊதா (ஜேர்மனி) | நான்காவது பரிமாணம் (கனடா) |
| சுவடுகள் (நோர்வே) | விழிப்பு (கனடா) |
| சுமைகள் (நோர்வே) | கிரிய குரல் (கனடா) |

Tamil Resource Centre (Canada)
Srilankans for Human Rights (Canada)
Campaign for Democracy in Sri Lanka (Canada)
South Asien Solidarity Committee (Germany)
Interculture Media Point (Grenzenlos-Germany)

www.padippakam.com



# சமாதானம்...?

# திரிசங்கு நிலையில் அகதிகள்



யுத்த மேகங்கள் சூழ்ந்துள்ள தற்போதைய சூழ்நிலையில் அகதிகளின் எதிர்காலம் கேள்விக்குறியாகவும் இருள் சூழ்ந்ததாகவும் காணப்படுகிறது.

புதிய அரசு பதவியேற்ற கையோடு ஏற்பட்ட நம்பிக்கைத் தளிர் முளையிலேயே கருகி விடுமோ என்று கருதுமளவிற்கு நிலைமைகள் மாறியுள்ளன. கட்டுமுறிப்புக்குளம் அசம்பாவிதங்களை அடுத்து அப்பகுதியை அண்டிய கிராமங்களைச் சேர்ந்த மக்கள் 3வது தடவையாக அகதிகளாகியுள்ளனர்.

## அலையும் வாழ்க்கை

நாட்டில் சமாதானம் உருவாகும் என்ற பெரு நம்பிக்கையுடன் இந்தியாவிலிருந்து வந்திறங்கிய மக்கள் தமது சொந்த இருப்பிடங்களை அடையு முன்னரே யுத்தச் செய்தி அவர்களுக்கு பேரிடியாக அமைந்துவிட்டது.

இந்த அகதிக்கப்பல்களும் அகதி ரயில்களும் எத்தனை ஆண்டுகளுக்கு வந்துகொண்டிருக்கப் போகின்றனவோ தெரியாது.

மக்கள் அடிக்கடி ஓடிக்கொண்டிருப்பது இயல்பு வாழ்க்கை போல் ஆகிவிட்டது. இந்தியாவிலிருந்து அகதிகளாக இலங்கைக்கு வருபவர்கள் எத்தனை சிரமங்களை எதிர்நோக்குகிறார்கள் என்பது சாதாரணமாகச் சிந்திப்பவருக்கே இலகுவில் புரிந்துவிடும்.

தமிழ்நாட்டில் எங்கோ மூலையிலிருக்கும் அகதி முகாம்களிலிருந்துசென்னையில் அமைக்கப்படும் தற்காலிக முகாம்களுக்கு கொண்டுவரப்பட்டு, அங்கு இரு வாரமோ ஒரு மாதமோ தரித்திருந்து அவர்களுக்குரிய சந்தர்ப்பம் வரும்போது கப்பலில் ஏற்றப்படுகிறார்கள். இவ்வாறு ஏற்றப்படுபவர்கள் திருமலைக்கோ, மன்னாருக்கோ கொண்டுவரப்பட்டால், அங்கு அமைக்கப்படும் தற்காலிக முகாம்களில் தங்கியிருக்க வேண்டும்.

தத்தமது சொந்த மாவட்டங்களுக்கு அனுப்பப்பட்டாலும் அங்கும் தற்காலிக முகாம்களில் தங்கியிருக்க வேண்டும். பின்னர் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களில் அவர்களுடைய சொந்த இருப்பிடங்களோ உறவினர்களோ இருக்கும்பட்சத்தில் அங்கு செல்லலாம்.

இல்லாவிடில் அங்குள்ள நிரந்தர அகதி முகாம்களுக்கு அனுப்பப்படுகிறார்கள். பின்னர் 15, 20 நாட்களின் பின் தமது சொந்த ஊர்களுக்கு அனுப்பி வைக்கப் படுகிறார்கள்.

இந்த அவலமிக்க பயணத்தில் பொலிஸார்,உளவத்துறையினர், பாதுகாப்புத்துறையினர், பாதுகாப்புச் சோதனைகள் என பல கெடுபிடிகளை அனுபவிக்கிறார்கள். இவை எல்லாம் முடிய.... ஏன்தான் இங்கு மனிதர்களாய்ப் பிறந்தோம் என்ற சலிப்பு ஏற்படுத்தப் படுகிறது.

சம்பந்தப்பட்டவர்கள் புரிந்துகொள்வார்களா? அண்டைநாட்டில் அகதிமுகாம் சொந்த நாட்டிலும் அகதிமுகாம் என்ற ஒரு விஷச் சுழல் வட்டத்துக்குள்ளேயே வாழ இவர்கள் நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கிறார்கள்.

## அகதிச் சுழல்

யூ.என்.எச்.சி.ஆர். போன்ற நிறுவனங்கள் அகதிகள் நலன்களில் அக்கறையோடு செயற்பட்டாலும், அகதிகள் இவ்வளவு அவஸ்தைகளையும் சந்தித்துத்தான் ஆக வேண்டும். இந்த நாட்டைப் பீடித்துள்ள யுத்தம், சந்தேகம் என்னும் நோய்கள் இத்தகைய நிலையிலேயே வாழ வைத்திருக்கிறது.

முகாம்களில் அடைந்து கிடக்கும் அகதிகள் மீள்குடியேற்றப்படுவெதன்றால் கூட பாதுகாப்பு, தொழில் போன்ற பிரச்சினைகளை எதிர்நோக்குகிறார்கள். முகாம்களில் கொடுக்கப்படும் உலர்உணவுடன் வாழாவெட்டியாக வாழும் ஒரு தங்கிநிற்கும் வாழ்க்கை ஒரு தசாப்தத்திற்கு மேலாக நிலவுகிறது.

இப்படியே போனால் இந்த சமுதாயம் தனது சகல வினைத்திறன்களையும் இழந்து ஒரு தங்கி நிற்றல் வாழ்க்கை முறைக்கு பழக்கப்பட்டதாகிவிடும்.

## நீதியற்ற அரசியல்

திருமணம், கல்வி, தொழில் எல்லாவற்றையும் அகதிகள் முகாம்களுக்குள்ளேயே மேற்கொள்ள வேண்டிய நிலைக்கு எமது சமுதாயத்தை இந்தக் கொடிய யுத்தம் சீரழித்துள்ளது. பயங்கரவாதத்தின் ஊடுருவல் என்ற பெயரில் அகதி முகாம்களில் கைதுகள், காணாமற் போவது போன்ற நிகழ்வுகள் நடந்தேறுகின்றன.

இந்த யுத்தத்தின் கறைபடிந்த அத்தியாயமாக 1990இல் யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேற்றப்பட்ட முஸ்லீம்கள் புத்தளம் அகதிமுகாம்களில் எப்போது சொந்த இருப்பிடங்களுக்கு திரும்பிச் செல்லும் காலம் வரும் என ஏங்கிக் கிடக்கிறார்கள். வடகிழக்கில் சொந்த இருப்பிடங்களில் இருப்பவர்களை விட குறைந்த வருமானத்தைப் பெறும் இவர்கள்தான் பொருளாதாரத் தடை, யுத்தம் போன்ற நடவடிக்கைகளால் மிக மோசமாகப் பாதிக்கப்படுகிறார்கள்.

பொதுஜன முன்னணி அரசு பதவி ஏற்ற பின் புதிய நம்பிக்கைகளுடன் அகதிகள் திருமலையில் வந்திறங்கியபோது பொலிசாராலும், பாதுகாப்புச் சோதனையாளர்களாலும் நடத்தப்பட்ட முறை பெரும் பீதியை ஏற்படுத்துவதாக அமைந்திருந்தது. வர்த்தக நோக்கங்களுக்காக அகதிகள் பயன்படுத்தப்படுவது உண்மையேயாயினும் அகதிகளை வருத்துவது எந்தவிதத்திலும் நீதியாகாது.

## அகதிகள் தேசம்

யாழ்ப்பாணத்தில் புலிகளால் விடுதலை செய்யப்படும் பொலிஸ்காரர்கள் எவ்வாறு இலங்கை அரசால் வரவேற்கப்படுகிறார்கள்? மாறாக, யுத்தத்தின் கோரப்பிடியிலிருந்து தப்புவதற்காக இந்த நாட்டைவிட்டு அகதிகளாகச் சென்றவர்கள், நம்பிக்கையுடன் திரும்பி வரும்போது அவர்களுடைய பொதிகளை துப்பாக்கிக் கத்தியால் கீறி பொருட்களை அள்ளி – வெந்த புண்ணில் வேல் பாய்ச்சப்படுகிறார்கள். இது இலங்கையின் சட்டம் ஒழுங்குத்துறையினர் பற்றி இழிவான எண்ணத்தையே மக்கள் மத்தியிலும் உலக அரங்கிலும் ஏற்படுத்தும்.

பெரிய விடயங்களை பெரிய திட்டங்களைப் பற்றி வானளாவப் பேசலாம். ஆனால் சாதாரண மனிதன் எதிர்நோக்கும் பிரச்சினைகள் உதாசீனம் செய்யப்படுமிடத்து, எல்லாம் வெறும் காகிதக்கட்டுகளாகத்தான் எஞ்சும். நடைமுறை என்று எதுவும் இருக்காது.

இத்தகைய பிரச்சினைகளுக்கு பரிகாரம் காணுவதென்பதும் சாதுரியமானதும் துணிச்சலானதுமான அரசியல் முடிவுகளிலேயே தங்கியுள்ளது. இல்லையேல் இன்னும் ஒரு தசாப்தத்தில் இலங்கை ஒரு அகதிகள் தேசமெனப் பிரகடனப்படுத்தப்பட வேண்டிய நிலை ஏற்படலாம்.

**– எஸ். திருநாவுக்கரசு**
**திருமலை**

## திருமலையில் மேதினக் கூட்டம்

ஈ.பி.ஆர்.எல்.எஃப். இன் மேதினக் கூட்டம் திருமலை மாவட்ட கூட்டுறவு சபை மண்டபத்தில் ஈழ தொழிற்சங்க ஆலோசகரும் கலைஞருமான திரு. து. துரைவீரசிங்கம் தலைமையில் நடைபெற்றது. ஈ.பி.ஆர்.எல்.எஃப். செயலாளர் நாயகம் சுரேஷ் பிரேமச்சந்திரன், முன்னாள் வட கிழக்கு முதலமைச்சர் வரதராஜப்பெருமாள் ஆகியோர் வாழ்த்துச் செய்தி அனுப்பியிருந்தனர்.

இரா. துரைரட்ணம் (தேசிய அமைப்பாளர்-ஈ.பி.ஆர்.எல்.எஃப்), சு. கைலைநாதன் (மத்தியகுழு-ஈ.பி.ஆர்.எல்.எஃப்.), பி.எம்.கே. சிறில் (மாவட்ட செயலாளர்-இலங்கை தொழிற்சங்க சம்மேளனம்), தில்லைநாதன் (செயலாளர்-சிக்கன கடனுதவி கூட்டுறவு சமாஜம்), காசிநாதர் (தலைவர்-நகரசுத்தி தொழிலாளர் சங்கம்), ரகுநாதன் (செயலாளர்-கூட்டுறவு தொழிலாளர் சங்கம்), ஏகாம்பரம் (செயலாளர்-வட கிழக்கு துறைமுக தொழிலாளர் சங்கம்), அனுரப்பியரத்ன (திட்ட இணைப்பாளர்-ஜனசவிய நம்பிக்கை நிதியம்), ஞானசேகரம் (தெங்கு பனம்பொருள் கூட்டுறவு சங்கம்), பியதாசா (மத்தியகுழு-எஸ்.எல்.எஃப்.பி) ஆகியோர் உரையாற்றினார்கள். முன்னாள் வட கிழக்கு மாகாண சபை உறுப்பினர் திலகராஜா நன்றியுரை ஆற்றினார்.

## ஆற்றல்மிகு தோழர்களே....

(3ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ் மக்களை மீண்டும் ஓர் யுத்த சகதிக்குள் மூழ்கடிப்பதற்கு புலிகள் முயற்சி செய்வதை நாம் எல்லோரும் வன்மையாகக் கண்டிக்க வேண்டும்.

ஒரு தலைமுறையின் கல்வியும், வாழ்வும் பாழடிக்கப்பட்டு, கலை கலாச்சாரங்கள் சீரழிக்கப்பட்ட நிலையில் மீண்டும் ஓர் யுத்தம் என்பது இனத்தையே அழித்தொழிப்பதற்கு ஒப்பானது. எந்தவித காரணமுமின்றி அரசுடனான பேச்சுவார்த்தையைக் குழப்பி, ஓர் யுத்தத்தை ஆரம்பித்ததன் மூலம் இவர்கள் எதனைச் சாதிக்கப் போகின்றார்கள்?

இவர்களின் தற்போதைய யுத்தமானது, மேலும் பல அழிவுகளையும் மக்களுக்கு நிம்மதியற்ற வாழ்க்கையையும்தான் தருமே தவிர, வேறு எதனையும் இந்த யுத்தத்தினால் இவர்கள் சாதிக்கப் போவதில்லை.

எனவே தோழர்களே!

தமது குறுகிய இயக்க நலன்களுக்காக இனத்தையே பகடைக் காய்களாக்கும் புலிகளின் போக்கை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது. ஒருசில கடற்படைக் கப்பல்கள், சில விமானங்களைத் தகர்ப்பதனூடாக மாத்திரம் போராட்டம் வெற்றியடைந்துவிட முடியாது. உலக நாடுகளின் பல்வேறுபட்ட போராட்ட வரலாறுகள் மட்டுமல்ல, இன்றைய உலகின் நடைமுறையும் இதனையே நிரூபித்து நிற்கிறது.

ஆகவே போராட்டத்தைச் சரியான திசை வழியில் கொண்டுசென்று, எமது கோரிக்கைகளை வென்றெடுக்க நாம் அனைவரும் ஒன்றுபட்டுச் செயற்பட வேண்டும் என இத் தொழிலாளர் தினத்தில் நாம் உறுதி எடுக்க வேண்டும்.

இதன் மூலம் மாத்திரமே சகல மக்களினதும், தொழிலாளர்களினதும் நலன்களைப் பாதுகாக்கக்கூடிய, ஜனநாயக உரிமையுள்ள, தமிழ் மக்களின் கௌரவத்தை நிலைநாட்டக் கூடிய ஓர் தீர்வினை நாம் எட்டமுடியும்.

இப்படிக்கு
உங்களன்புத் தோழன்.

## கேள்வி-பதில்....

(....8 ம் பக்கத் தொடர்ச்சி)

களுக்குப் பிரச்சாரம் செய்ய முன்னுக்கு வருவார்கள் – ஒருகட்டத்தில் புலிகளின் அழிவுப் பாதையைப் புரிந்து கொண்டவர்கள் சத்தமின்றி மௌனமாகி விடுவார்கள்.

இவ்வாறு மூக்கிருக்குமட்டும் சளியும் இருக்கும் என்றமாதிரியான புலி ஊதுகுழல்களெல்லாம் உண்மையை விளங்கிக்கொள்ளும் வரை (சிலருக்கு ஒருநாளும் ஏறவே ஏறாது) தமிழ் மக்களின் நலன்களைப் பின்னுக்குத் தள்ளிப் போட்டுக்கொண்டே போகமுடியாது.

அது ஒருபுறமிருக்க,

இன்றைய நிலைமை பற்றிய இவர்களது அலசல் என்பது, புலிகள் எந்தப் பிழையையும் விடுவதற்கு உரிமையுடையவர்கள் என்று அங்கீகரித்துக் கொண்டு, அவர்களைச் செல்லமாகத் தட்டிவிட்டுக் கொண்டே அரசு தரப்பிலான பிழைகளை நுளுந்தித் தேடுவதாகவே இருக்கிறது.

அரசு, முன்னாலிருந்த ஒரு பெரிய சுவரில்தான் பந்தை அடித்து விளையாடிக் கொண்டிருந்ததாகவும், பந்து பிழையான திசையில் தெறித்தாலோ அல்லது பின்னால் தூரப் போய் விழுந்தாலோ அல்லது உடைந்து போய்விட்டாலோ அது அரசின் பிழை தானே என்கிற மாதிரியான ஒரு விமர்சனத்தை முன்வைக்கிறார்கள்.

அரசின் பிழைகள் இருக்கட்டும். ஆனால், மோதல் தவிர்ப்பு ஒப்பந்தத்தை மீறியது புலிகளின் பிழைதான் என்பதைக் கூடச் சொல்ல முடியாவிட்டால், இவர்களுக்கு ஏன் அரசியல் விமர்சனம் எழுதும் வேலை? பாலசிங்கத்துக்கு உதவியாகப் புலிஅறிக்கைகள் தயாரிக்கும் வேலைக்கு மனுப் போடலாமே.

அரசியல் தீர்வுக்கான பேச்சுவார்த்தைக்கு வரும்படிதானே சந்திரிகாஅரசாங்கம் கேட்டுக் கொண்டிருந்தது. புலிகள் யுத்தத்தில் இறங்கியது யாருடைய நலன்களுக்காக?

அரசாங்கமானது, வடக்கு கிழக்கு மீதான இராணுவ அழுத்தத்தை வாபஸ் பெற வேண்டும், புலிகளை ஆயுதங்களுடன் திரிய அனுமதிக்க வேண்டும்....(புலிகள்கூட இவ்வாறான நேரடி நிபந்தனைகள் போடவில்லை என்பது வேறு விஷயம்) இரண்டையும் செய்து அரசாங்கம் தன் இதயசுத்தியைக் காட்டினால்தான் புலிகள் பேச்சுவார்த்தையைக் குழப்பாமலிருப்பார்கள் என்று எழுதுகிறவர்களின் புலித் தமிழாவேசம் நம்மைப் புல்லரிக்க வைக்கிறது.

ஏதோ அந்தளவுக்குச் சூசகமாய்ச் சொல்லத் தெரியாவிட்டாலும், நம்ம எளிய புத்திக்கு எட்ன வரை.... 'ஏ! சிங்களப் பேரினவாத அரசே! உண்மையாகவே உனக்குத் தீர்வில் அக்கறை இருந்தால்.... இதயசுத்தி இருந்தால்.... தமிழீழத்தைப் பிரித்துப் புலிகளிடம் தந்துவிட்டு, அதன்பிறகு அரசியல் தீர்வைப் பற்றிப் பேசு....' என்று ஓங்கிக் குரல்கொடுக்கிறோம். (புலிகளே! உங்கள் HitListல் நம் பெயரிருந்தால் இனி நீக்கி விடலாமல்லவா?) தமிழுணர்வில் சளைத்தவர்களில்லை நாமும். நமக்கும் தமிழ்தான் மூச்சு.

படிப்பகம்

www.padippakam.com



## சமாதானப் பேச்சுவார்த்தை வெற்றியடையுமா?

# வட-கிழக்கில் புலிகளின் போர்த் தயாரிப்புகளும் நம்பிக்கையிழந்துவிட்ட மக்களும்

பொருளாதார, மீன்பிடித் தடைகள் அகற்றப்பட்ட வேளை வடக்கில் ஏற்பட்டுவரும் மக்களின் சிந்தனை மாற்றங்களையும், வாழ்நிலை மாறுதல்களையும், புலிகளின் போக்கில் மாற்றம் உண்டாகியிருக்கிறதா என்பதையும் அறிய யாழ்ப்பாணத்திலிருந்து வந்த பல்வேறு தரப்பு மக்களுடன் பேசினோம். சந்தோஷப்படக்கூடிய ஒரு முன்னேற்றம்.... இவைபற்றி மக்களுடன் பேசும்போது முன்னரைவிட பயம், தயக்கம் குறைந்து ஓரளவு மனம் திறந்து பேசினார்கள். நாம் சந்தித்தவர்களின் பேச்சிலிருந்து நாம் பெற்ற இரண்டு முக்கிய கணிப்புகள்:

1. எவரேனும் புலிகளை ஞாயப்படுத்தி அல்லது புகழ்ந்து பேசவில்லை.

2. எவருமே பேச்சுவார்த்தை தோற்க வேண்டும், தமிழீழமே ஒரே வழி என்ற கருத்தைக் கொண்டிருக்கவில்லை. மாறாக, பேச்சுவார்த்தை வெற்றியளித்து இத்துடன் சண்டைக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்ற விருப்பத்தையே வெளியிட்டனர். அத்துடன் புலிகள் அமைதிப் பேச்சுவார்த்தையில் விசுவாசமாக இல்லை என்ற கணிப்பையும், அதனால் வேதனையையும் வெளிப்படுத்தினர்.

கட்டுரையும் குறிப்பும் –
வவுனியாவிலிருந்து நமது நிருபர்
க. செல்வநாயகம்.

புதிய அரசு பதவியேற்று 8 மாதங்கள் முடிகிறது. 'நாம் பேசத்தயார் அரசுதான் தயாரில்லை' என அரசுமீது புலிகள் குற்றம் சாட்டிய நிலையிலிருந்து 'பேச்சுவார்த்தை மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பேன்; நாட்டில் ஆயுதக் கலாச்சாரத்திற்கு முடிவுகட்டி அமைதியை ஏற்படுத்தியே தீருவேன்' என ஆட்சிக்கு வந்த அரசு பேச்சுவார்த்தையை நம்பிக்கையுடன் ஆரம்பித்தது. அதற்கேற்ப பொதுமக்களுக்கிருந்த பல்வேறு அசௌகரியங்களையும் நீக்குவதில் குறிப்பிடத்தக்களவு முன்னேறியது. போரால் வதைப்பட்ட மக்கள் முகத்தில் நம்பிக்கையும் பிறந்தது.

ஆனால் முன்னர் புலிகள் அரசைக் குற்றம் சாட்டியதற்கு மாறாக, அமைதிப் பேச்சுவார்த்தையில் தமது நாணயத்தைக் காட்டுவதற்கு பதில் பெயரளவிற்கு பேசிக்கொண்டு யுத்தத் தயாரிப்பில் ஈடுபடுவதும், மறுபக்கத்தில் அரசு ஆரம்பத்திலிருந்த வேகம் குறைந்து விடயங்களை ஆமை வேகத்தில் நகர்த்துவதும் பெரும்பாலும் பேச்சுவார்த்தை தொடர்பாக மக்கள் நம்பிக்கையிழந்துவிடக் காரணமாகிவிட்டது. அமைதி வரவேண்டும் என்பதில் மக்களுக்குள்ள அதீத ஆர்வத்திற்கு எதிர்மறையாகவே வட கிழக்கில் புலிகளின் பேச்சுக்களும் செயற்பாடுகளும் நடைபெற்றுவருகின்றன.

பேச்சுவார்த்தை தொடர்பாகவும், புலிகளின் அணுகுமுறை தொடர்பாகவும், வடக்கில் புதிய அரசின் நடவடிக்கைகளால் ஏற்பட்டிருக்கும் மாற்றங்களையும் அறிய வடக்கிலிருந்து வந்த பல்வேறு தரப்பட்ட மக்களைச் சந்தித்து அளவளாவினோம்.

ஓர் விவசாயியுடன் பேசியபோது, "அமைதி ஏற்பட்டால் இப்ப அனுபவிக்கிற சுகபோகங்களை அவங்களால் (புலிகளால்) அனுபவிக்கேலுமா? நடைப்பிணமாய் வாழுறது நாங்களல்லோ! அவங்களுக்கென்ன குறை? மின்சாரம் இருக்கு, மோட்டார் சைக்கிள், கார், ஜீப், லொறி கிட்டத்தட்ட அங்க உள்ள வாகனமெல்லாம் அவங்கட மாதிரித்தான், டி.வி, ரேடியோ, நல்ல சாப்பாடு.... இப்படி வசதிகளைவிட மனம் வருமோ? அதால பேச்சுவார்த்தையெல்லாம் சரிவர விடமாட்டாங்கள். பேப்பரில பார்க்கேல்லையே, ஆய்தம் கொண்டுதிரிய வேணுமெண்டு அமைதிப் பேச்சுவார்த்தைக்கு நிபந்தனை போட்டதிலையே விளங்கேல்லையே? போராலை யாழ்ப்பாணத்தில் இழப்பு மக்களுக்குத்தானே ஒழிய புலிகளுக்கல்ல.

> அவங்கள் அப்பப்ப நேரடியாகவும் மறைமுக மாகவும் பணம் புடுங்க வருவாங்கள். சாப்பிட, கொட்டாவி விட வாயைத் திறக்கலாம் மற்றபடி மூச்.

ஊரைக்கொள்ளையடித்து எல்லா நவீன வசதிகளையும் அவர்கள் அனுபவிக்கின்றனர். சமாதானம் வந்தால் இதையெல்லாம் இழக்க வேண்டிவரும். இதெல்லாம் சரிவராது...." என நக்கல், கோபம், அவநம்பிக்கை எல்லாம் கலந்த தொனியில் பதிலளித்தார்.

ஓர் ஓய்வுபெற்ற ஆசிரியையைச் சந்தித்தபோது அவரது பக்கத்துக் கிராமம் பற்றி விசாரித்தோம். "நாங்கள் அந்தப்பக்கம் போய் 4 வருசமாகுது. வீடுண்டு, நல்லூருண்டு அவ்வளவும்தான்...." புலிகளைப் பற்றிக் கேட்டபோது, "ஏதோ அந்த நல்லூரானாலதான் இவ்வளவு நாளும் உயிரோட இருக்கிறோம். அவங்கள் அப்பப்ப நேரடியாகவும் மறைமுகமாகவும் பணம் புடுங்க வருவாங்கள். சாப்பிட, கொட்டாவி விட வாயைத் திறக்கலாம் மற்றபடி மூச். அவ்வளவு டிசிப்பிளினா வச்சிருக்கிறாங்கள். (நக்கல்) கொழும்புக்கு வாறதுக்குள்ள நாங்கள் படுகிற அவலம்....? இப்பிடி வருமெண்டு முந்தி நினைச்சுப் பார்த்திருப்பமே?" என அழாக்குறையாகப் பதிலளித்தார்.

பேச்சுவார்த்தை பற்றி புலிகள் மக்களுக்கு என்ன கூறுகிறார்கள்? நம்பிக்கை தரும் வகையில் பேசுகிறார்களா? எனக் கேட்டோம். "அவர்களின் கூட்டம் எதையும் நான் பாக்கேல்ல. ஆனால் சில பள்ளிக்கூட ஆசிரியர்கள் மத்தியில் அவர்கள் பேசும்போது, பேச்சுவார்த்தை வரும் போகும். இதனால இப்ப இங்குள்ள கட்டமைப்புகள் நடைமுறையள் ம்ாறப்போகுதெண்டு நினைக்க வேண்டாம். சர்வதேச அளவில் எங்களைப்பற்றி இருக்கிற அபிப்பிராயத்தை மாத்தவேணும். அதுக்காகத்தான் பேச்சுவார்த்தையேயொழிய அதாலையெல்லாம் தீர்வு வராது என்று பேசினார்களாம்...." சர்வதேச அளவில் அவர்களைப் பற்றிய என்ன அபிப்பிராயத்தை மாத்தவாம்? என்று நாம் மெல்லத் துருவினோம்.

> எப்பிடியாவது வெளிநாடு போகவேணும்...இங்கு மனுசர் வாழ முடியாது வெளிநாடு போவது தவிர வழியில்லை

சிரித்துக்கொண்டே, உண்மையா ஒண்டும் விளங்காத மாதிரி வேணுமெண்டு கேக்கிறியள் என்றுவிட்டு, "புலிகளை உலகம் விடுதலைப் போராளிகளாகப பார்க்கவில்லையாம். பயங்கரவாதிகளாகத்தானாம் பாக்குது. அமைதித் தீர்வு தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்தினால்தான் அது மக்கள் நலனில் அக்கறையுள்ளது; விடுதலைக்குத்தான் போராடுது என்ற அபிப்பிராயத்தை ஏற்படுத்தலாம் என்பதைத்தான் அவர்கள் சொன்னதாக நான் விளங்கினேன்" என்றார்.

ஓர் மத்தியதர வகுப்பு இளைஞருடன் பேசினோம். மக்கள் எந்தளவிற்கு அடக்கியாளப்படுகிறார்கள் என்பதை விளக்கச் சில சம்பவங்களைச் சொன்னார். ஓர் பாடசாலைப் பிள்ளைகள் நாகர்கோவில் பகுதிக்கு சுற்றுலா சென்றனராம், ஊர்மனைகள் தாண்டி சன நடமாட்டமற்ற வெட்டவெளிப்பகுதி வந்ததும் பிள்ளைகளை மகிழ்விக்க பஸ்காரர் சினிமாப்பாட்டைப் போட்டாராம் வேகமாகப்போன பஸ்சுக்கு எதிர்முனையிலிருந்து சிவில் உடையில் ஒருவர் மோட்டார் சைக்கிளில் வந்து பஸ்ஸை விலத்திப்போனார். அவர் யூனிபோமில் இல்லாததால் சாரதி கவனிக்கவில்லை. போனவர் பஸ்ஸை விரட்டிவந்து ம்றித்து புலிகளின் முகாமுக்கு பஸ்ஸைக் கொண்டு சென்று, சினிமாப்பாட்டுப் போட்ட குற்றத்திற்காக ரூபா 500 தண்டப்பணம் பெற்றுவிட்டு எச்சரித்து அனுப்பினராம். அன்றைய தனது உழைப்பு முழுவதையும் புலிக்கு கட்டிவிட்ட வேதனையுடன் திரும்பினாராம் சாரதி.

புலிகளின் செஞ்சோலைக்கு நிதி தேவையென அங்குள்ள சில கோவில்களுக்குச் சென்று அதற்குப் பொறுப்பான பெண்புலி ஐம்பதாயிரம், ஒருலட்சம் என பெருந்தொகை பணம் கேட்டாராம். சிலர் பேரம்பேசி கொஞ்சம் குறைத்துக் கொடுத்தார்களாம். ஒரு கோவிலில், 'இங்கு அந்தளவு வருமானம் இல்லை. உள்ள கொஞ்ச வருமானத்தில்தான் கோவில் பூசைகள் நடக்குது' எனப் பதிலளித்தனராம். 'இல்லை, இங்கு நிறையக் காசு வருகுது நீங்கள் தரத்தான் வேணும்' என்றாராம். 'அப்படியானால் உங்கள் கோரிக்கையை பக்தர்களிடம் சொல்லி உங்களுக்கெனத் தனியான உண்டியல் வைக்கிறோம் அதில் விழும் முழுப்பணத்தையும் உங்களுக்கே தருகிறோம்' என்றார்களாம். 'எங்களையும் மக்களையும் கொழுவிவிடப் பார்க்கிறியளோ?' என கோபத்துடன் சீறிவிட்டுப் போனாராம் அந்தப் பெண்புலி.

(பின்னர் பல்வேறு தொந்தரவு கொடுத்துப் பணம் வாங்கி விட்டார்கள்) சிலநாட்களில் புலிகளின் முக்கியஸ்தர் புதுவை ரத்தின்துரை அறிக்கை விட்டாராம். போர்க்கால நிலைமையில் கோவில்கள் தமது செலவுகளைச் சுருக்கி புலிகளுக்குப் பணம் கொடுக்க வேண்டும் என்பதே அவ்வறிக்கை.

ஓர் ஆசிரியரிடம் பொருளாதாரத்தடை நீக்கியபின் பொருட்களின் விலைகள் எந்தளவுக்குக் குறைந்திருக்கிறது? என்று கேட்டதற்கு, காய்கறி மீன் ஓரளவு குறைந்திருக்கிறது. ஆனால் பல பொருட்கள் தடை நீக்கிய பின் மூன்று மடங்காக உயர்ந்துவிட்டது என்றார். ஆச்சரியமாக அவரைப் பார்த்தேன். ஓர் ஆற்றாமையுடன் சொன்னார், ஸ்ரீலங்கா அரசாங்கம் தடை நீக்கியதும் தமிழீழ அரசாங்கம் 40–50 சதவீதம் பல பொருட்களுக்கு வரிகளை உயர்த்தி விட்டார்கள். புலி 50% வரி உயர்த்தினால், கடைக்காரரும் அந்தச் சாக்கில் கொஞ்சம் வறுகிறதுதானே? என்று விட்டுச் சொன்னார், தடைக்கு முன் பெயின்ற் 600ரூபா சொச்சம் வித்ததாம், தடை நீக்கியபின் 1600 சொச்சம் வித்தார்களாம் கடைக்காரரிடம் காரணம் கேட்டதற்கு இவ்வதிகரிக்கப்பட்ட தொகை புலிகளுக்குத்தான் எமக்கல்ல என்றாராம்.

ஓர் நகைக்கடையில் ஒரு மோதிரத்திற்கு பில் போடாமல் விற்றுவிட்டார்களாம். புலிகள் அந்தக் கடைக் கணக்குப் புத்தகங்களையும் எடுத்து கடைக்குச் சீல் வைத்துவிட்டு, 18லட்சம் குற்றப்பணம் கட்டிவிட்டுத் திறப்பை எடுத்துச் செல்லலாம் எனக் கூறினார்களாம். கடைக்காரர், 'இங்கு மனிதர் வாழ முடியாது வெளிநாடு போவது த்விர வழியில்லை' எனப் புலம்பிக்கொண்டிருக்கிறாராம்.

> இப்படித்தான் பாதிக்கப்பட்ட ஒருவரிடம் நானும் சொன்னேன். அதற்கு அவர் இந்த 300 ரூபாவையேனும் எடுக்கச் சம்மதித்ததற்கு அவங்களைக் கும்பிடவேணும் என்றார்

இன்னோர் கடைக்காரர் (சிறிய பலசரக்குக்கடை), ஓர் முத்திரையை பில் போடாமல் விற்றுவிட்டார்ராம் அவரை (1ரூபா முத்திரை ஒரு ரூபா 25 சதத்திற்கு விற்றார்) கைது செய்து சில நாட்கள் பங்கரில் வைத்தபின் தண்ட்ப்பணமாக 50000 ரூபாவைப் பெற்று விடுதலை செய்தார்களாம். அவர் அக்கடையை விட்டு இப்ப சைக்கிளுக்கு ரியூப் ஒட்டும் வேலை செய்கிறார். எப்படியாவது வெளிநாடு போகவேண்டும் என்ற முடிவில் இருக்கிறாராம்.

"இதைவிட மோசம் தம்பி, வருமானம் மிகக் குறைந்தவர்கள் என்று அரசாங்கம் மாதம் 450 ரூபாய்க்கு முத்திரை வழங்குகிறது. இதனை புலிகளின் உத்தரவின் பேரில் விதானைமாரே 150 ரூபா முத்திரையை வெட்டிக்கொண்டு 300 ரூபாதான் கொடுக்கினம். ஒவ்வொர் விதானை மூலமாகவும் வெட்டப்பட்ட தொகையை மொத்தமாக புலிகள் வாங்கிச் செல்கின்றனர்...." இது அநியாயம் என்றேன். "இப்படித்தான் பாதிக்கப்பட்ட ஒருவரிடம் நானும் சொன்னேன். அதற்கு அவர் இந்த 300 ரூபாவையேனும் எடுக்கச் சம்மதித்ததற்கு அவங்களைக் கும்பிடவேணும் என்றார். அதற்கு மேல் நான் பேசவில்லை" என்றார்.

சிலகாலத்திற்கு முன், பள்ளிக்கூடப் பிள்ளைகளுக்கு வழங்கப்படும் (ஒரு நாளுக்கு 3 ரூபா) முத்திரைகளையே அதிபர்கட்கு நெருக்கடி கொடுத்து பறித்துச் சென்றார்கள் என்றார். சரி, பேச்சுவார்த்தை பற்றி அவர்கள் என்ன மக்களுக்குச் சொல்கிறார்கள். உண்மையாக முயற்சிப்பதாக கூறுகிறார்களா அல்லது அவநம்பிக்கையாக பேசுகிறார்களா? எனக் கேட்டேன். இவ்வளவும் சொன்னபின் உதென்ன கேள்வியென்றார். எனது கேள்விக்கு இப்பதிலில் சரியான விளக்கமில்லையெனினும் அவர் எந்தளவுக்கு மனம் சலித்துவிட்டாரென்பதைப் புரிந்துகொண்டு விடைபெற்று விட்டேன்.

> அலுவலகத்தடியில பெரிய கியூ... லொறியெல்லாம் கிளிநொச்சியில அடுக்கியிருக்கு. பொய்யும் புரளியும்.... மனிசரை வதைக்கிறாங்கள்....

இன்னோர் நடுத்தர விவசாயக்குடும்பம் கணவன், மனைவி, அவர்களுடன் வந்த சில அயலவர்கள் என ஓர் குழுவிடம் பேசினோம். "என்னய்யா, சாமானெல்லாம் இப்ப வருகுதே? விலை நல்லாக் குறைஞ்சிருக்குமே?" என்றேன். "அதையேன் தம்பி கேக்கிறாய்? இன்னென்ன சாமானெல்லாம் தடை நீக்கியாச்செண்டு அரசாங்கம் ரேடியோவில சொன்னதைக் கேட்டு வலு சந்தோஷம். ஆனா அஞ்சாறு நாளா ஒருசிலது தவிர மற்றதுகளின்ரை விலையில மாற்றமில்லை. யாழ்ப்பாணத்தில அவையின்ரை பேப்பரில 'அரசாங்கம் மக்களை ஏமாற்றுவதற்குத்தான் அறிவித்தது. இது வெறும் கண்துடைப்பு. வவுனியாவில ஆமி சாமான்களை விடேல்ல. இப்படித்தான் சிங்கள அரசு வாக்குறுதிகள் தாறது. எங்களுக்குத் தெரியும் தானே' என்ற பாணியில செய்திகள் வந்தது. நாங்களும், உண்மைதான் முந்தின அரசாங்கங்கள் மாதிரி சந்திரிகாவும் வாக்குறுதிதான், நடைமுறையில் அவை மாதிரித்தான் என நினைச்சுக்கொண்டு வந்தம். கிளிநொச்சிக்கு வரேக்கதான் உண்மை விளங்கிச்சு" என்றார். என்ன உண்மை என்று ஆவலுடன் கேட்டேன். "நாலைஞ்சு நாளாய் சாமான் கொண்டுவந்த லொறியள் எல்லாத்தையும் ஓமந்தை புளியங்குளப் பக்கம் நிப்பாட்டிச் சாமான்களை இறக்கிக் காடுகளுக்க அங்க இஞ்ச அனுப்பிப்போட்டு, கிளிநொச்சி வந்து அவையின்ரை அலுவலகத்தில காசு வாங்கச் சொல்லிக் கட்டளையாம். கிளிநொச்சியில அவையின்ரை அலுவலகத்தடியில பெரிய கியூ காசு வேண்ட..... சிலர் 3–4 நாட்களாய்க் கூட நிக்கினமாம். லொறியெல்லாம் கிளிநொச்சியில அடுக்கியிருக்கு. பொய்யும் புரளியும்.... மனிசரை வதைக்கிறாங்கள்...." என்றார் எரிச்சலுடன். ●

படிப்பகம்

www.padippakam.com



## புலிகளைப் பிழை சொல்லியே எழுதிவருகிறீர்களே? அவர்கள் இத்தனை உறுதியாகவும் வீரத்தோடும் போராடி வருவதால்தானே அரசாங்கம் பேசுவதற்கும் தீர்வை வைப்பதற்கும் முன்வந்திருக்கிறது. நீங்களெல்லாம் கொழும்பில் போயிருக்க, அவர்கள் மக்களோடு நின்று போராடுவதால்தானே அரசாங்கம் பேச்சுக்கு இறங்கிவர நிர்ப்பந்திக்கப்பட்டது என்பது உண்மையில்லையா?

**பதில்:–** முதலில் நாங்கள் எல்லாம் கொழும்பில்தான் இருக்கிறோம் என்பது உண்மையில்லை. மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களில் புலிகளின் கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகளில் நாங்கள் மக்களோடு தங்கியிருந்து வேலை செய்து வருகிறோம்.

தமிழ்மக்களின் உரிமைகளைப் பெற்றுக் கொள்ள தனிநாடு கேட்டுப் போராடிய இயக்கங்கள் அனைத்தையுமே புலிகள் தடை செய்து, தமது ஆயுத மேலாதிக்கத்தை ஏற்படுத்திக் கொண்டார்கள். (ஈரோஸில் ஒரு பிரிவினர் மட்டும் புலிகளோடு சேர்ந்து கொண்டார்கள்) என்பது எல்லோரும்அறிந்ததே. இதனால்தான் புலிகளின் கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகளில் மட்டுமே ஏனைய தமிழ் அமைப்புகள் இன்று செயற்படக் கூடியதாய் இருக்கிறது.

இதைவிடுத்து, புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளுக்கும் போய், தமிழ் மக்களுக்கு இன்று நல்லது என்ன என்பதைச் சொல்லி மக்களை அணிதிரளச் செய்ய முற்பட்டால், புலிகளின் தாக்குதல் வெறியும், மனிதக் குண்டுத் தற்கொலைப் படைகளும் திசைதிரும்பி தமிழ்ச் சகோதரர்களுக்கு எதிரான போராட்டமாக – அதுவே அவர்களின் முதன்மையான போராட்டமாக ஆகுமென்பதைக் கடந்தகால அனுபவங்களிலிருந்து யாரும் இலகுவாக விளங்கிக் கொள்ள முடியும்.

இதனடிப்படையில், புலிகளின் போராட்டமானது அவர்களின் குறுகிய நோக்கங்களுக்காகவே நடத்தப்படுகிறதேயொழிய மக்களின் நீண்டகால நலன்களினடிப்படையில் இல்லை என்பதையும் நாம் புரிந்து கொள்ளலாம்.

இன்றைய சர்வதேச நிலைமைகளோடு தொடர்புபடுத்தி நோக்குமிடத்து, தமிழீழத்திற்குப் பதிலாக சமஷ்டி முறையிலான பிரதேச சுயாட்சி அலகே யதார்த்தபூர்வமானது என்று புலிகளின் தலைவர்கள் உண்மையாகவே நினைத்தார்களானால், அது சரியானதே. ஆனால், அதற்கான பல்வேறு சந்தர்ப்பங்களையும் புலிகள் வேண்டுமென்றே குழப்பினார்கள் என்பது தான் உண்மை.

சமாதானமான சூழ்நிலை வந்துவிடக் கூடாது–அது தொடரக்கூடாது என்று தமது பாதுகாப்பைக் கருதி புலித் தலைவர்கள் அஞ்சுகிறார்கள் எனவும், தீர்வொன்றுவந்து அமைதிச் சூழல் ஏற்பட்டுவிடக் கூடாதென்றே விரும்புகிறார்களென்றும் கூறப்படுவதில் உண்மையில்லையென்று அவர்களது நடவடிக்கைகள் நிருபிக்கவில்லை. மக்கள் விரும்புவது யுத்தத்தை அல்ல; இந்த நாட்டில் கௌரவமான குடிமக்களாய் வாழக் கூடிய ஒரு தீர்வினை எடுக்க வேண்டுமென்பதைத்தான். அந்தச் சந்தர்ப்பங்களையெல்லாம் புலிகள் குழப்பி வருகிறார்கள்.

இது புலிகளின் மேலே வேறு ஏதோ காழ்ப்பை வைத்துக்கொண்டு சொல்லப்படுவதல்ல. "கொலை செய்வோம் அல்லது தற்கொலை செய்துகொள்வோம்" என்ற மோசமான ஒரு அழிவுச் சித்தாந்தத்தைக் கொண்டு, மரணச் சுழலிலிருந்து விடுபட முடியாத சுயநலக் காரணங்களுக்காக தமிழ்மக்களை வாழவொட்டாமல் செய்து வருகிறார்கள் என்பதே நாம் அவர்களைப் பிழை சொல்லக் காரணம்.

மனித நாகரிகம் வளர்ந்துவிட்ட இந்தக் காலத்தில், மனித உயிர்களைக் கொல்லும் நிகரற்ற ஆற்றலும், மனித வளங்களை, பொருளாதார வளங்களை, வாழ்க்கையைச் சிதைத்தழிக்கும் ஆற்றலும் வீரமெனப் போற்றப்படுவதில்லை. அது நாம் காட்டுமிராண்டிகளாக வாழ்ந்த கற்காலத்து வீரம்.

மனித உயிர்களைப் பாதுகாத்து வாழவைக்கக் கூடிய முடிவுகளை எடுக்கும் திறனும், யுத்தங்களை முடிவுக்குக் கொண்டுவந்து சமரசப் பேச்சுக்களில் எதிரிகளை வெல்லும் விவேகமும், மனித வளங்களையும் பொருளாதார வளங்களையும் மேம்படுத்துவதில் காட்டும் வினைத்திறனுமே இன்றைய வீரமெனக் கொண்டாடப்படுகிறது.

ஒடுக்குமுறைக்கெதிராக, தவிர்க்கப்பட முடியாதவிடத்து யுத்தம் தேவைதான். ஆனால், யுத்தத்தையே தவிர்க்கமுடியாத மன நோயாளிகளாகி விடுவது வீரமல்ல. "தண்ணீரை நீ கலக்காவிட்டால் என்ன? உன் அப்பன் கலக்கியிருப்பான்" என்று ஆட்டுக்குட்டிமீது பாய்ந்த ஓநாய்க் கதையாக ஏதாவது காரணத்தைச் சொல்லிக் கொண்டு சண்டையை ஆரம்பிப்பது, நிச்சயம் மக்களுக்கு நிம்மதியான வாழ்க்கையைப் பெற்றுத் தருவதற்காய் இருக்காது.

சந்திரிகா அரசாங்கம், அரசியல் தீர்வுக்கான பேச்சுவார்த்தைக்கு வரும்படிதான் புலிகளைக் கேட்டு வருகிறது.

நம்மைப் பொறுத்தவரையிலும், ஏன் ஏனைய தமிழ் அமைப்புகளைப் பொறுத்தவரையிலும் யாழ்ப்பாணத்தில் போயிருக்க முடியாவிட்டாலும், வடக்கு கிழக்கு பிரச்சினைக்கான தீர்வை வைப்பதற்கு முன்வரும்படி செய்ய அரசாங்கத்திற்கு பல்வேறு வகைகளிலும் நெருக்குதல் கொடுத்து வந்திருக்கிறோம்.


இன்றைய சர்வதேச நிலவரங்களின்படி, எந்த மக்களையும் எந்தவொரு அரசாங்கமும் நீண்ட காலத்துக்கு அடக்கி ஒடுக்கி வைத்திருக்க முடியாது. அந்த மக்கள் கிளர்ந்தெழுந்து தங்கள் உரிமைகளைப் பெற்றே தீருவார்கள். நாம் சிந்திக்க வேண்டியது, தீர்வுக்கான வாய்ப்புகளை எல்லாம் ஏன் புலிகள் குழப்பி வருகிறார்கள் என்பது பற்றித்தான். நாம் கண்டிக்க வேண்டியது, மக்களின் குரல்வளையை நெரித்து மக்களின் விருப்பத்துக்கு மாறாக அவர்கள்மீது புலிகள் வதை வாழ்க்கையை திணித்து வருகிறார்கள் என்பதற்குத்தான்.

---

இந்தமுறை கேள்வியும் நாங்களே பதிலும் நாங்களே. தொடர்ந்து இனிமேல் உங்கள் கேள்விகளுக்கும் தோழரடிப்பொடி அவர்கள் பதிலளிப்பார். நிச்சயம் இவ்வளவு நீளமான அறுவையாக இருக்காது என்பதை வேண்டுமானால் உறுதிப்படுத்துகிறோம். கேள்விகளை அனுப்ப வேண்டிய முகவரி:

தோழரடிப்பொடி பதில்கள்
புதிய கண்ணோட்டம்
த.பெ.இல: 442
கொழும்பு

# குறுக்கெழுத்துப் போட்டி–12



### இடமிருந்து வலம்

1. ஐந்தாவது சுற்று நடக்குமா?
5. சாமியார்கள் அணிவது.
7. தன்னால் முடியும் என்ற மன உறுதி. (தலைகீழ்)
10. 'மா' சேர்த்தால் மாதா.
11. கிஷ்கிந்தாவாசி. (தலைகீழ்)
12. பிறகு.
13. ஏற்றத்தாழ்வில்லாத நியாயம். (தலைகீழ்)
14. இதுவும் பல் குத்த உதவும்.
15. வியாபாரி. (தலைகீழ்)
16. உறுமீன் வரும்வரை வாடியிருக்குமாம், இங்கே தலைகீழாக.
18. வானத்திலிருந்து தண்ணி வருமுன்னர்... அல்லது வயிற்றுக்குள் தண்ணி போனபின்னர்.
20. பேச்சுவழக்கில் 'தா' அல்லது போதை மருந்து.
21. இதமான அனுபவம்.
24. சுக்ரீவனுக்கு அண்ணன்.
25. நீண்ட பரந்த மணல்வெளி. (தலைகீழ்)
27. செம்பு. (தலைகீழ்)
28. முகவரி. (தலைகீழ்)

### மேலிருந்து கீழ்

1. முரசு.
2. ஜெயலலிதா மீதான வழக்குக்கு ஆளுனரிடம் அனுமதி பெற்றிருப்பவர்.
3. தேவர். (தலைகீழ்)
4. முன்னறி தெய்வங்களில் ஒருவர். (தலைகீழ்)
6. அறம்செய ----. செய்யவேண்டியதில்லை.
8. விதிகளுக்குப் புறம்பாக நடந்தவர் கட்சியிலிருந்து ----. (குழம்பி)
9. வாக்கியம். (தலைகீழ்)
10. ----- நான் அடிமை என்பது எம்.ஜி.ஆர் படம்.
12. வயிறு. (தலைகீழ்)
13. சிறுத்னி.
14. விளக்குமாறு.
17. எதிர்ப்பு ஊர்வலங்களில் எடுத்துச் சென்று எரிக்கும் உருவம்.
18. விண்ணப்பம்.
19. உலகம்.
22. பங்களாதேஷ் பிரதமர்.
23. பிணம். (தலைகீழ்)
26. மஜ்னுவின் காதலி.

### கு.எ.போட்டி–10 விடைகள்:

**இடமிருந்து வலம்:**
1. சமாதானம்
5. சங்கவை
8. முட்டை
9. யசோதை
11. குடு(மி)
12. தாசி
13. மலடி
14. கவண்
15. வயது
16. பரு
17. குங்குமம்
19. சிம்மம்
20. புயலுக்குமுன்
22. கற
23. பவ
24. விகுதி
27. சம்பவம்
30. இல்லாமை
31. கரடு
32. அவி
33. புதிர்
34. குறும்பு

**மேலிருந்து கீழ்:**
1. சமுதாயம்
2. மாட்சி
3. தாடை
4. குடும்பக்குவலயம்
5. சதை
6. கடுவ(ன்)
7. வைகுண்டம்
10. சோடி
13. மயங்கு
14. கரும்புவில்
15. முதுகு
16. பசிய
18. மன்றம்
21. வலு
22. கசப்பு
25. குலாவி
26. அமைதி
28. பகர்
29. வர
30. இன்னம்

சரியான விடை எழுதி ரூபா 100 பரிசாகப் பெறும் அதிர்ஷ்டசாலி:

**கே. அகிலநாதன்
3ம் வட்டாரம்.
உடப்பு.**

பாராட்டுப் பெறத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஐந்து பேர்கள் வருமாறு:

1. ஏ.எல். அமீர் ஹுசைன், 210, கே.கே.பி. வீதி, கல்முனை-3.
2. எஸ்.என். சாந்தி, கோவில்புதுகுளம், வவுனியா.
3. கி. பாஸ்கரன், கோளாவில்-2, அக்கரைப்பற்று.
4. செல்வி. எல். தர்மரட்ணம், 104, மணிங் பிளேஸ், கொழும்பு-6.
5. அ. முகம்மது அஸ்வர், 376 பி, மக்பூலியா வீதி, மருதமுனை-6.

**விடைகளை மட்டும் தனியாக ஒரு தபாலட்டையில் எழுதி எதிர்வரும் 25ந் திகதிக்கு முன் அனுப்பிவையுங்கள்.**

புதிய கண்ணோட்டம்,
த.பெ.இல: 442,
கொழும்பு.

## வடக்கு கிழக்கில் நிலைகொண்டிருந்த இராணுவ அழுத்தத்தைக் குறைக்க அரசாங்கம் முன்வரவில்லை என்றும், பேச்சைக் குழப்பிவிட்டுப் புலிகள் போர் தொடுக்க ஆரம்பித்தால் அதை எதிர்கொள்ளவும் படைகள் தயாராகவே இருக்கின்றன... என்று அரசாங்கம் கூறிவந்ததாகவும், இவ்வாறு அரசாங்கம் இதயசுத்தியுடன் ஈடுபடாததால்தான் பேச்சுவார்த்தை குழம்பிப் போயிற்று என்று சில தமிழ் அரசியல் விமர்சகர்கள் நிலைமையை விளக்குகிறார்களே அதுபற்றி உங்கள் கருத்து என்ன?

**பதில்:–** இரண்டொருவர்தான் அப்படி எழுதியிருக்கிறார்கள். அவ்வாறே எழுத விரும்பும் பிரபல விமர்சகர்கள் பலரும் ஏனோ மௌனம் சாதிக்கிறார்கள். அவர்களுக்கு ஏதேனும் சின்னச் சின்ன மன சாட்சித் தொந்தரவுகள் ஏற்பட்டிருக்கலாம். ஆதரவுப் பிரச்சாரகர்களைக்கூட சங்கடப்படுத்தி விடுவது புலிகளுக்கு வாடிக்கைதான்.

ஒவ்வொரு காலகட்டத்திலும், அவர்களில் சிலர் புலிகளைப் பற்றி உண்மையைப் புரிந்துகொள்ள புதிதாய் வேறுசிலர் புலி

(....தொடர்ச்சி 6ம் பக்கம்)

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி EPRLF

22, வெளிவட்ட வீதி, வவுனியா சுரேஷ் பிரேமச்சந்திரன் அவர்களால் இரத்தனப்பிட்டிய CRC அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

படிப்பகம்